
GOKULAM

கோகுலம்

ஏப்ரல் 2005

ரூ.6/-



அனிமேஷன் படங்கள் உருவாவது எப்படி?


வண்ணம்
தீட்டுங்கள்!

கோகுலம்

(கல்கி நிறுவன வெளியீடு)

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் ஆசிரியர் பொறுப்பேற்று அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ், 47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32

முதன்மை உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622 / 23 / 24


தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com


சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
வெளிநாடு
(விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யுஎஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகள் மனம் கவர்ந்த இதழ்







ஏப்ரல் 2005 ✣ மலர் : 23 ✣ இதழ் : 3

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்.
- பாரதியார்

அன்புள்ள உங்களுக்கு...

வணக்கம்.

பரீட்சைக்காகப் படித்துக் கொண்டிருப்பீர்கள். இந்த நேரத்தில் சுட்டெரிக்கும் வெயில். கோடையின் ஆரம் பத்திலேயே வெயில் இப்படி யென்றால்... இன்னும் மே, ஜூன் மாதங்களில் எப்படி இருக்குமோ!

வெயில் நேரத்தில் வெளியே செல்வதைக் கூடிய வரை தவிர்த்து விடுங்கள். கட் டாயம் செல்ல வேண்டுமென் றால் குடை, தொப்பி போன்ற வற்றை எடுத்துக் கொள்ளுங் கள். வெயிலில் விளையாடி, சக்தியை வீணாக்காமல் வீட் டுக்குள்ளே, மர நிழலில் அமர்ந்து விளையாடலாம். பருத்தி துணிகளை அணிவது நல்லது.

தினமும் நிறைய நீர் வியர் வையின் மூலம் வெளியேறும். எனவே நிறையத் தண்ணீரைக் குடியுங்கள். பழரசம், தர்பூசணி, இளநீர், மோர் போன்ற உடலுக் குத் தீங்கு செய் யாத பானங்களை அருந்துங்கள். காலை, மாலை இரு வேளை யும் (தண்ணீர் கிடைத்தால்) குளியுங்கள்! கோடையைச் சமாளியுங்கள்.



செஞ்சி சாரதா மெட்ரி குலேஷன் பள்ளியிலிருந்து நமது கோகுலம் அலுவலகத் துக்கு ஒரு மிகப் பெரிய பார்சல் வந்தது. திறந்து பார்த்தால் செஞ்சிக் கோட்டையில் உள்ள கல்யாண மஹாலை மாணவர் கள் தக்கையின் மூலம் அழகாக செய்து பிறந்த நாள் பரிசாக அனுப்பியிருந் தனர். அவர்கள் அனைவருக்கும் கோகுலத்தின் நன்றி!



அன்புடன்,

தம்பிப்பயல்

நவரத்தின நாகஸ்வரம்!

பாக்கியத்தம்மாளுக்கு உடம்பு சரியில்லாமல் போனதால் தனது காய்கறிக் கடைக்குக் கீர்த்தியை அனுப்பினாள். கடைக்கு ஒரு கிழவர் வந்தார்.

''குழந்தாய்! என்னிடம் பணமில்லை. இரக்கப்பட்டு ஏதாவது காய் கொடுத்தால் சமைத்து சாப்பிடுவேன்'' என்றார். ஒரு பெரிய புடலங்காயை எடுத்துக் கொடுத்தான் கீர்த்தி.

அவர் சில புடலை விதைகளைக் கொடுத்து ''இதை உன் வீட்டருகில் நடு. இது உன்னைப் பணக்காரனாக்கும்'' என்று சொல்லிச் சென்றார்.

பாக்கியத்தின் கடைக்குப் பக்கத்தில் கடை போட்டிருந்த நாகமணி பாக்கியத்தம்மாளிடம் வத்தி வைத்தாள்.

பாக்கியம் படு கோபத்தோடு மகனுக்காகக் காத்திருந்தாள். கீர்த்தி சந்தோஷத்தோடு வந்து புடலை விதைகளைக் கொடுத்து கிழவர் சொன்னதைக் கூறினான்.

''ஆமாம்! சும்மா காய் வாங்கிட்டுப் போகிறோமே என்று யாராவது எதையாவது தந்தா இளிச்சவாய்த்தனமா கேட்டு வரதா? நாளைக்கே இது முளைச்சு பணத்தைக் கூடையிலே அள்



ளப் போறோம்''
என்று சொல்லி
ஆத்திரத்தோடு
அதை சன்னல் வழி
யாக வீசினாள்.

கீர்த்தி வருத்தத்தோடு தூங்கப் போனான். மறுநாள் காலை எழுந்து நீள நீள மாய்த் தொங்கும் புடலங்காய் களைக் கண்டு ஆச்சரிய மடைந்தான்.

உள்ளே சமையலறைக்கு ஓடி, ''என்னமோ சொன்னீங்களே! வந்து பாருங்க! நேற்றைக்கு நீங்க வீசின விதை முளைச்சு, பெரிய கொடியாகி நீளமான புடலங்காய்களா காய்ச் சிருக்கு'' என்றான்.

பாக்கியத்துக்குத் தன் கண்களையே நம்பமுடியவில்லை! கொடி கொள்ளாத காய்கள்!

மளமளவென்று ஏணியில் ஏறி புடலங் காய்களைப் பறித்துப் போட்டாள். முந்தைய நாள் கோள் மூட்டிய நாகமணி,



மாலதி

''என்ன பாக்கியம்? எப்ப புடல் விதைச்சே? நேத்து நான் வந்தப்பகூட பார்க்கலியே?'' என்று அங்கலாய்த்தாள். பக்கத்திலே ஒரு வேப்ப மரமும் அரச மரமும் இருந்தன. அதன்மேல் பற்றிப் படர்ந்து கொடி மேலே ஏறியிருந்தது.

மொத்த வியாபாரிகள் வண்டியைக் கொண்டு வந்து புடலங்காயைக் கட்டுக் கட்டாக வாங்கிப் போனார்கள். பாக்கியம் சீக்கிரமே செல்வவதியாகி விட்டாள்.

பெரிய மாடி வீடு கட்டினார்கள். அந்த மாடியைத் தாண்டியும் கொடி மேலே போயிற்று. ஒருநாள் கீர்த்தி கெட்டியாகக் கயிறு போலிருந்த கொடியைப் பிடித்துக் கொண்டு மேலே மேலே போய்க் கொண்டிருந்தான்.



இருபத்தேழு வருடங்கள் சிறையில் கழித்தவர்.

முடிவே இராதோ என்று தோன்றியது. ஓடும் மேகங்களைப் பார்த்தான். நிலவின் குளர்ச்சியை அனுபவித்தான்.

திடீரெனப் படிகள் வந்தன. அதில் ஏறினான். ஓர் அரண்மனைக்குள் அது அழைத்துச் சென்றது.

'இது தேவலோகமா? இந்திரனது அரண்மனையா? ஒருவேளை வைகுண்டமோ? ஏன் யாரையும் காணவில்லை! என்று யோசித்தபடி நடந்தான்.

திடீரெனப் பொருள்கள் ஆடின. ''யார் உள்ளே? நர வாசனை அடிக்கிறதே!'' என்று உறுமும் குரல் கேட்டது. கீர்த்தி சடாரென்று ஒரு மறைவிடத்தில் ஒளிந்து கொண்டான்.

வந்தவன் ஒரு ராட்சதனாக இருக்க வேண்டும்! பூதாகரமான உடல்; கறுப்பு நிறம்; கோரைப் பற்கள்; செம்பட்டை முடி; பருத்த தொந்தி. ஆசனத்தில் அமர்ந்து கொண்டு ஒரு மணியை அழுத்தினான்.

ஒரு குள்ள பூதம் வந்தது.

''போய் நவரத்ன நாதஸ்வரத்தை எடுத்து வா'' என்று உத்தரவிட்டான் அரக்கன்.

குள்ள பூதம் குடுகுடுவென்று ஓடிப் போய் ஒரு நாதஸ்வரத்தைக் கொணர்ந்தது. அதில் மிகவும் அழகாக நவரத்னங்கள் பதிக்கப்பட்டிருந்தன.

''மனிதர்களுக்குப் பணம் கொடுத்தால்தான் ஆடு, மாடு, பன்றிகளைத் தருகிறார்கள்'' என்றபடி ராட்சதன் அதை ஊத ஆரம்பித்தான்.

என்ன அதிசயம்! தங்க நட்சத்திரங்களாக வந்து விழுந்தன. அவற்றைச் சேகரித்து ஒரு சிறு பையில் போட்டுக் கட்டி அரக்கனிடம் நீட்டியது குட்டி பூதம். அரக்கன் அதை எடுத்துக் கொண்டு படிகள் வழியே இறங்கிச் சென்றான்.

அவன் போனதும் மறைவிடத்திலிருந்த கீர்த்திவாசனின் காதைப் பிடித்து வெளியே இழுத்தது குட்டி பூதம்.

கீர்த்தி நடுங்கினான். குட்டி பூதம், "பயப்படாதே! நான் உன்னைக் காட்டிக் கொடுக்க மாட்டேன். இந்த அரக்கனைக் கொல்வதற்காக கடவுள் அனுப்பிய தூதன் நீ!"

கீர்த்தி ஆச்சரியத்துடன் "அரக்கனை நான் கொல்வதா? நடக்கக் கூடிய காரியமா?" என்று கேட்டான்.

"இல்லையேல் நட்டவுடனே முளைக்கும் அதிசயப் புடல் விதையை உன்னிடம் ஏன் கொடுக்கிறார்? சற்று நேரத்தில் அரக்கன் ஏதாவது மிருகத்தோடு வருவான். அவன் பார்க்க இந்த நவரத்ன நாதஸ்வரத்தோடு நீ ஓடு. அவனால் தலை கீழாகத் தான் இறங்க முடியும். நான் ஒரு மந்திரக் கோடாரி தருகிறேன். உன் வீட்டு மொட்டை மாடியில் குதித்ததும் அந்தக் கோடாரியால் புடலங்கொடியை வெட்டி விடு" என்று மந்திரக் கோடரியையும் நவரத்ன நாதஸ்வரத்தையும் கொடுத்தது குட்டி பூதம்.

அரக்கன் ஓர் ஆட்டோடு வந்தான். அவன் பார்க்க படிகளில் ஓடிய கீர்த்தியைப் பின் தொடர்ந்தான் அரக்கன். குட்டி பூதம் சொன்னபடி மொட்டை மாடியில் குதித்தவுடன் கொடியை மந்திரக் கோடாரியால் ஒரே போடாகப் போட அரக்கன் அலறியபடி விழுந்து உயிரை விட்டான்.

புடலங் கொடி வாடி விட்டதே என்று வருந்திய தாயிடம் நவரத்ன நாதஸ்வரத்தை வாசித்துக் காண்பித்தான்.

இப்போது கீர்த்திவாசன் பெரிய நகைக்கடையின் எஜமானராகி விட்டான். ●



"முந்தி எல்லாம் எப்ப கூப்பிட்டாலும் உடனே வந்துடுவியே காரம் போர்டு விளையாட. இப்ப ஏன் வரவே மாட்டேங்கறே?"

"அல்சர்பா! டாக்டர் காரம் பக்கமே போகக் கூடாதுன்னுட்டார்!"

- ஆர். சாரதா,
திருவான்மியூர்

அனிமேஷன் படங்கள் உருவாவது எப்படி?

சிறுவர்களிடம் உனக்கு மிகவும் பிடித்த விஷயங்கள் என்னென்ன? என்று கேட்டால் ஐஸ்க்ரீம், சாக்லேட், பொம்மை, புது டிரஸ், கார்ட்டூன் படங்கள் என்று கண்டிப்பாகச் சொல்கின்றனர். டீ.வி. நிகழ்ச்சி களில் கூட கார்ட்டூன் நிகழ்ச்சிகளையே குழந்தைகள் அதிகம் விரும்புகின்றனர். டாம் & ஜெரி, டொனால்ட் டக், ஸ்கூபிடூ, பாப்பாய் போன்றவை குழந்தைகளின் மத்தியில் உலாவரும் ஹீரோக்கள்.



• 3டி படங்கள்






• வெங்கி பாபு

குழந்தைகள் மட்டுமின்றி பெரியவர்களையும் கவர்கின்றன இந்த அனி மேஷன் படங்கள்.

கார்ட்டூன்கள் எப்படி தோன்றின, அதை எப் படி உருவாக்குகிறார் கள் என்பது அனி மேஷன் படங்களைப்



பார்ப்பது போலவே ரொம்பவும் சுவாரசியமான விஷயங்கள்.

மாயா பிம்பம் என்ற கிராபிக்ஸ் கம்பெனியின் நிறுவனர் வெங்கி பாபு அதைப் பற்றிச் சொல் கிறார்.

‘‘**வ**ழக்கம் போல் உள்ள கதைகள் மாதிரி இல்லாமல்





* டிஸ்னி

* 2டி படங்கள்

குழந்தைகளை வேறுவிதமாக குஷிப்படுத்தணும்னு வால்ட் டிஸ்னி நினைச்சபோது தான் உருவாச்சு மிக்கி மவுஸ், டொனால்ட் டக் கேரக்டர்கள்.

‘‘2டி கேரக்டர்களா இவர் உருவாக்கின இந்த அனிமேட்டட் கேரக்டர்ஸ் அமெரிக்காவுல சூப்பர் ஹிட்டாக, வார்னர் பிரதர்ஸ் கம்பெனியிலிருந்து வெளிவந்தது என்ன தெரியுமா? உங்களையெல்லாம் கார்ட்டூன் சேனல் முன்னால் கட்டிப் போடுதே டாம் & ஜெரி கேரக்டர்ஸ்தான். ஆனா

லும் இன்னைக்கும் அனிமேஷனோட காட் ஃபாதர் யார் என்று கேட்டால் உலகமே வால்ட் டிஸ்னி என்றுதான் சொல்லும்.

''ஆனா அமெரிக்காவால மட்டும்தான் முடியுமான்னு ஜப்பானிலிருக்கிற அனமோ ஸ்டூடியோஸ் முதன் முறையா மனித உருவங்களைக் கொண்ட 2டி அனிமேட்டட் கேரக்டர்ஸ் உருவாக்க, அது ஆச்சர்யப்படும் விதமா அமெரிக்காவுல சூப்பர் ஹிட்டாகி



இன்றைக்கும் குழந்தைகளின் ஃபேவரிட்டாக விளங்குது.


''மாற்றங்கள் தானே உலகின் முன்னேற்றத்திற்கான முதல் படி. ஆக, டெக்னாலஜி வளர வளர முப்பரிமாணமுள்ள 3டி அனிமேஷன்ஸ் வந்தது.''

''எங்களுக்கு 2டி, 3டி அனிமேஷன், டெக்னாலஜி வித்தியாசமெல்லாம் தெரியறதில்லை. அப்படின்னா என்ன?'' என்று நீங்கள் கேட்பது புரிகிறது.

''வால்ட் டிஸ்னி காலத்துல என்ன பண்ணாங்கன்னா, ஒரு ஃப்ரேமுக்குத் தேவையான 25 படங்களின் அசைவையும் தனித் தனியா வரைஞ்சு அது ஒவ்வொண்ணையும் கேமிராவுல படம் பிடிச்சு வரிசையா பிளே பண்ணினா படம் ஓடற மாதிரி தெரியும். இது தான் 2டி அனிமேஷனோட தொடக்கம்.

''ஒரு கேரக்டரின் நீளம், அகலம், உயரம் என முப்பரிமாணத்தையும் காட்டும் 3டி அனிமேஷன்ல என்ன பண்ணுவாங்க? முதலில் ஒரு கேரக்டரை வரையும் பொழுது அதன் கைகளை விரிச்சு வைச்சு வரைவாங்க. அப்புறம் அப்படியே ஸ்கேன் பண்ணி கம்ப்யூட்டருக்குள்ள கொண்டு வந்து, வரைஞ்ச கேரக்டரை மாடலா பண்ணி அதுக்குள்ளே எலும்பு ஜாயிண்ட்ஸ் வைப்பாங்க. இந்த ஜாயிண்ட்ஸைப் பிடிச்சு இழுத்தா கேரக்டர்ஸ் நமக்குத் தேவையான அசைவுகளைக்

கொடுக்கும். முதல் ஃப்ரேமில் கை கீழே இருக்கிற மாதிரியும் 25வது ஃப்ரேமுல கையை மேலே தூக்கி வைச்சு ப்ளே பண்ணினா இடையிலிருக்கிற மூவ்மெண்ட்ஸை கம்ப்யூட்டர் சாஃப்ட்வேரே தானா பண்ணிடும். டிஸ்னி காலத்துல பண்ணின மாதிரி ஒவ்வொரு ஃப்ரேம் அசைவையும் வரையத் தேவையில்லை. இப்போ எல்லோருக்கும் புரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன்.



''நீங்க எல்லோரும் ஜூராஸிக் பார்க் பார்த்திருப்பீங்க. அதுல பலவிதமான கிராபிக்ஸை உபயோகப்படுத்தியிருப்பாங்க. 'ரோபோடிக்ஸ்' என்கிற முறையை உபயோகப்படுத்திதான் ஒரு ஸீன்ல ஆளைத் தூக்கியடிச்சு சாப்பிடுற காட்சியை எடுத்தாங்க. அதாவது புரோக்ராம் பண்ணி ரோபோவை உருவாக்கி அதுக்கு மேலே டைனோசரோட ஸ்கின் டெக்ஸ்டரை போர்த்தி நீங்க எல்லாம் பயப்படற மாதிரி நிஜ டைனோசரையே சினிமாவுல காட்டிட்டாங்க. இது மாதிரி கிராபிக்ஸ்ல உருவான லயன் கிங், ஸ்ரெக் படங்களெல்லாம் அனிமேஷன் பண்ண ஐந்து வருஷம்கூட ஆகியிருக்கு.



''இன்னைக்கு டீ.வி.யில பார்க்குற எல்லா தமிழ் கார்ட்டூன் கேரக்டர்களும் ஆங்கிலத்தில் செஞ்சு, அப்படியே தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்டது தான். ஏன் நம் பாரம்பரிய கதைகளான ராமாயணம், மகாபாரதம், பஞ்சதந்திர கதைகள் போன்றவற்றை கார்ட்டூனாக மாற்றினால் நீங்களும் ரசிக்க மாட்டீர்களா என்றுதான் நாங்கள் அதில் முயன்று வருகிறோம்.

''மவுஸ் க்ளிக் பண்ணி கம்ப்யூட்டர்ல வீடியோ கேம்ஸ், கார்ட்டூன் ஃபிலிம்ஸ் பார்க்குற நீங்களும் இத்துறையில் நுழையலாம். உங்களாலும் அடுத்தவர்களைச் சந்தோஷப்படுத்த முடியும்.''

- ச.ந. கண்ணன்

அட்டையில் : **பவித்ரா**

வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**

உகந்த இடம்

கதை, படம் : ராம்கி










மறுநாள் தான் தங்கியிருந்த காட்டுக்கு அரசனை அழைத்து வந்த துறவி தனது எளிய ஆடையை அணிந்து கொண்டு ஆடம்பர ஆடைகளை அரச னிடம் கொடுத்தார்.
மன்னா, என்னைப் போல் நீயும் எளிமையாக இங்கேயே தங்கிவிடு.
ஐயோ! அது எப்படி முடியும்? நான் அரசனாச்சே!
நான் உன்னுடைய ஆடம்பர வாழ்க்கையை ஏற்றுக் கொள்ளவில் லையா?... அதுபோல் நீயும் ஏன் என்னைப் போல் எளிய வாழ்க்கையை ஏற்றுக் கொள்ளக் கூடாது?
அரசனால் பேச முடியவில்லை. அமைதியாக நின்றான்.
அரசே! எனக்கு உகந்த இடம் இது தான். உனக்கு உகந்த இடம் அரசும் நாட்டு மக்க ளும்தான். அவரவர் இடத்தில் இருப்பதே சிறப்பு. நீ போய் நாட்டு மக்களுக்கு நல்லாட்சியைக் கொடு. உன்னை ஆசீர்வதிக்கிறேன்.
மிக்க நன்றி சுவாமி. உண்மையை உணர்ந்து கொண்டேன்.
பின்பு அரசன் விடைபெற்று தன் நாட்டுக்குச் சென்றான்.

மீண்டும்

கத்தார் டென்னிஸ் :

கத்தாரின் தோஹா நகரில் நடைபெற்ற கத்தார் ஓபன் டென்னிஸ் போட்டியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா பட்டம் வென்றார். இந்த ஆண்டில் அவர் வெல்லும் இரண்டாவது பட்டம் இது. சென்ற ஆண்டு விம்பிள்டன் பட்டத்தை வென்ற ஷரபோவாவுக்கு இது ஒன்பதாவது பட்டமாகும்.

• சச்சின்



துபாய் ஓபன் டென்னிஸ் :

துபாய் ஓபன் டென்னிஸ் ஆண்கள் ஒற்றையர் பட்டத்தை ரோஜர் ஃபெடரர் வென்றார். குரேஷிய வீரர் இவான் லூஜுபிசிக்கை 6 - 1, 6 - 7, 6 - 3 என்ற செட் கணக்கில் தோற்கடித்தார் ஸ்விட்சர்லாந்தின் ரோஜர் ஃபெடரர். தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இந்தப் பட்டத்தை இவர் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

துபாய் ஓபன் மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சானியா மிர்சா கலந்து கொண்டார். முதல் சுற்றில் உலகத் தரவரிசையில் 34வது இடத்தில் உள்ள குரேஷிய வீராங்கனை ஜெலீனா கோஸ்தானிக்கை 6 - 7, 6 - 4, 6 - 1 என்ற செட் கணக்கில் தோற்கடித்து இரண்டாவது சுற்றுக்குள் நுழைந்தார். இரண்டாவது சுற்றில் யு.எஸ்.ஓபன் சாம்பியனான ரஷ்யாவைச் சேர்ந்த ஸ்வேத்லானா குஸ்நெத்சோவாவுடன் மோதினார். 6 - 4, 6 - 2 என்ற செட் கணக்கில் உலகத் தரவரிசையில் 6வது இடத்தில் இருக்கும் குஸ் நெட்சோவாவை அதிர்ச்சி தோல்வியுறச் செய்தார் சானியா. சானியா 97வது இடத்திலிருக்கிறார். இந்த ஆட்டத்தை சானியா தன் டென்னிஸ் வாழ்க்கையில் முக்கியமான ஆட்டம் எனக் கூறினார். காலிறுதியில் நுழைந்த சானியா ஜெலனா ஜான்கோவிக்கிடம் தோல்வியடைந்தார்.

இறுதிப் போட்டியில் லிண்ட்சே டேவன் போர்ட் பட்டத்தை வென்றுவிட்டார்.

• சானியா



• ஷரபோவா



கார் பந்தையம் :

2005ஆம் ஆண்டு சீசனில்

முதல் ஃபார்முலா - 1 கிராண்ட் பீரிகார் பந்தயம் மெல்போர்னில் நடக்கிறது. அதில் பங்கேற்றுள்ளார் தமிழக வீரர் நரேன் கார்த்திகேயன். இந்தியாவிலிருந்து ஃபார்முலா - 1போட்டியில் பங்கேற்கும் முதல் வீரர் நரேன் என்பது குறிப்பிடத்தக்கது.





* ஃபெடரர்

* இன்சமாம்

சச்சின்!

கிரிக்கெட் :

இந்தியாவில் 3 டெஸ்ட் மற்றும் 6 ஒரு தினப் போட்டிகளில் விளையாடுவதற்காக பாகிஸ்தான் அணி 50 நாள் பயணமாக இந்தியா வந்திருக்கிறது.

காயம் காரணமாக விளையாடாமல் இருந்த சச்சின் டெண்டுல்கர் இந்தப் போட்டிகளில் மீண்டும் விளையாடுகிறார்.

சக்தி வீணாவதைத் தவிர்ப்போம்!



திவ்யாவும் பிரசாத்தும் காபி சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது பக்கத்து வீட்டு அங்கிள் வந்தார்.

''குட்மார்னிங் அங்கிள்'' என்றாள் திவ்யா.

''பேட் மார்னிங்'' என்றார் அங்கிள்.

''என்ன சொல்றீங்க?'' என்றனர் இருவரும்.

''உங்கள் வீட்டு வெளி விளக்கு இரவு முழுவதும் எரிந்து கொண்டிருந்தது. நான்தான் காலையில் அணைத்தேன்'' என்றார் அங்கிள்.

''இரவு அப்பா ரொம்பத் தாமதமாக வந்தார். தூக்கக் கலக்கத்தில் நான் விளக்கை அணைக்க மறந்து விட்டேன்'' - திவ்யா.

''உன் மறதியால் எவ்வளவு மின் சக்தி வீண் தெரியுமா?''

''என்ன அங்கிள், இப்படி பேசறீங்க? இது பொதுவிளக்கு. நாங்க பணம் கட்ட வேண்டியதில்லை. அதனால் நஷ்டம் ஒண்ணும் வரப் போறதில்லை'' என்றான் பிரசாத்.

''நஷ்டம் உங்களுக்கு வரலேன்னாலும் மின் சக்தி அனாவசியமாக வீணாவதால் நம் நாட்டுக்கு நஷ்டம்தானே! நமக்கு நஷ்டம் இல்லேங்கிறதுக்காக ஒரு பொருளை வீணாக்கக் கூடாது.''

''மன்னிச்சிடுங்க அங்கிள். இனி மேல் இப்படி செய்ய மாட்டோம்.''

''விடிந்து எவ்வளவு நேரமாயிடுச்சு! இன்னும் விளக்கை எரிய விடாதீங்க. ஜன்னல்களைத் திறந்து வைத்தால் சூரிய வெளிச்சம் நன்றாக வீட்டிற்குள் வரும். இயற்கை சக்தியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். சரி, வரேன்!'' என்றபடி அங்கிள் சென்றார்.

எந்தக் குடுவையில் எடை அதிகம்?

I. ஆசிரியர் ஒருவர் மேசையின் மேல் அளவுகள் குறிக்கப்பட்ட இரு கண்ணாடிக் குடுவைகளை வைத்தார். இரண்டும் ஒரே எடை உள்ளதாக இருந்தன.

அவர் ஒரு குடுவையில் 20 செ.மீ அளவுக்கு நீர் ஊற்றினார். இன்னொரு குடுவையில் நீரில் மிதக்கக்கூடிய மரத்துண்டு ஒன்றைப் போட்டார். பிறகு அதில் நீர் ஊற்றிக் கொண்டே வந்தார். குடுவையில் நீரின் அளவு 20 செ.மீ வந்தபோது நீர் ஊற்றுவதை நிறுத்தி விட்டார்.



பிறகு மாணவர்களிடம், ''இரண்டு குடுவைகளிலும் 20 செ.மீ அளவுக்கு நீருள்ளது. ஆனால் ஒரு குடுவையில் நீர் மட்டத்துக்கு மேல் ஒரு மரத்துண்டு மிதந்து கொண்டிருக்கிறது. இந்த இரண்டு குடுவையில் எது அதிக எடை?'' என்று கேட்டார்.

ஒரு மாணவன் 'மரத்துண்டு மிதக்கும் குடுவையே அதிக எடை உள்ளது. ஏனென்றால் 20 செ.மீ அளவு நீருடன் மரத்துண்டும் உள்ளது' என்றான்.

இன்னொரு மாணவனோ, 'நீரைவிட மரத்துண்டு எடை குறைவானது. எனவே நீர் மட்டும் உள்ள முதல் குடுவையே அதிக எடை உள்ளதாக இருக்கும்' என்றான். ஆசிரியர் என்ன சொல்லி இருப்பார்?

- ஜெ.ம. சதீஷ்குமார்,
பத்தாம் வகுப்பு, சிவகாசி
அரிமா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
சிவகாசி

II. ஏழு நண்பர்கள். அவர்கள் ஒரு நாள் புதையல் எடுக்கச் சென்றனர். ஒருவனுக்கு பை நிறைய தங்கக் காசு கிடைத்தது. இரண்டாவது நண்பன்



அதில் பங்கு கேட்டான். அந்தத் தங்கக் காசுகளை இரண்டாகப் பங்கிட்டனர். அப்போது ஒரு தங்கக் காசு மீதம் இருந்தது. மூன்றாம் நண்பன் பங்கு கேட்க அப்போது பங்கிட்ட போதும் ஒரு தங்கக்காசு மீதம் இருந்தது. நான்காவது நண்பன் கேட்க, நான்காகப் பங்கிட்டனர். அப்போதும் ஒரு தங்கக் காசு மீதம் இருந்தது. ஐந்தாவது நண்பன் கேட்டபோதும் ஒரு தங்கக்காசு மீதம் இருந்தது. ஆறாவது நண்பன் கேட்டபோதும் அவ்வாறே ஒரு தங்கக்காசு மீதம் இருந்தது. ஆனால் ஏழாவது நண்பன் கேட்டபோது அனைவருக்கும் சமமாகப் பங்கு கிடைத்தது. அப்படியானால் அந்தப் பையில் எத்தனை தங்கக் காசுகள் இருந்திருக்கும்?



- பி. பிரேம்குமார், ஒன்பதாம் வகுப்பு, சிவபாக்கியம் முத்துஸ்வாமி மெட்ரிகுலேஷன் பள்ளி, மாதேஸம்பாளையம்

III. ஒருவன் சைக்கிளில் ஒரே வேகத்தில் பிரயாணம் செய்கிறான். அவன் கடக்க வேண்டிய தூரத்தில் ஐந்தில் ஒரு பங்கைக் கடந்ததும் மணியைப் பார்த்தான். கடிகாரம் 10.50 காட்டியது. தன் இலக்கை அவன் அடையும்போது என்ன மணியாக இருக்கும்?

- எழில், பதினோராம் வகுப்பு, கன்னிவாடி

IV. ஓர் இடத்தில் சில கோழிகள் இரை தேடிக் கொண்டிருக்க, சில நாய்கள் உலாவிக் கொண்டிருந்தன. இரண்டின் தலைகளையும் எண்ணிப் பார்க்க 9. ஆனால் அதன் கால்களை எண்ணிப் பார்த்தால் 26 ஆக இருந்தன. எனில் ஒவ்வொன்றும் எத்தனை?

- ஆறுபாதி புகழேந்தி


V. ஒரு பாத்திரத்தில் பால் உள்ளது. அந்தப் பாலில் 3 பங்கு சுத்தமான பால். ஒரே ஒரு பங்கு நீர் உள்ளது. பாலும் நீரும் சரிசமமாக இருக்கப் பாத்திரத்தில் எவ்வளவு கலப்புப் பாலை எடுத்துவிட்டுத் தண்ணீரைச் சேர்க்க வேண்டும்?

- சு. கண்ணகி, மிட்டூர்.

VI. கால், அரை, முக்கால் கட்டிகள் என எட்டு கட்டிகள்; அத்தனையும் தங்கக் கட்டிகள்! பிள்ளைகள் மூவருக்கும் கட்டிகளை உடைக்காமல் சம பங்காய் பிரித்துக் கொடுக்க வேண்டும். எப்படி?

- நெ. பிரஜோற்பத்திகலை, ஏழாம் வகுப்பு, மங்களம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, புவனகிரி

விடை 79ஆம் பக்கம்



கோகுலம் சந்தா செலுத்துங்கள்; கதை கேளுங்கள்!

எப்படி பெறலாம்?

* புதிதாக சந்தா செலுத்தலாம் ☐ * ஏற்கெனவே உள்ள சந்தாவை மேலும் ஓர் ஆண்டுக்கு நீட்டிக்கலாம் ☐ * உங்கள் நண்பருக்குப் பரிசாக சந்தா கட்டி நீங்கள் காஸெட் பெறலாம். ☐

பெயர்: .... நண்பரின் பெயர்: ....

முகவரி: .... முகவரி: ....

....

....


....

ஒரு வருட சந்தா ரூ. 72/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் அனுப்பினால் ரூ.20/- கூடுதலாக சேர்த்து அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்.) கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

மரத்தில் காய்த்த தங்கக் காசுகள்!







அம்மா நில்லுங்கள். நான் பேரிச்சம்பழம் வாங்கித் தரேன். அந்தக் காசைக் கொடுங்கள்.
பிறகு-
4 வெள்ளிக் காசுக்கு ஒரு கிலோ பேரிச்சம்பழம் கொடு.
முட்டாள்! நாலு வெள்ளிக் காசுக்கு ரெண்டு கிலோகூட வாங்கத் தெரியலை!
அம்மா, இதை வைத்துக் கொள்ளுங்கள்.
கடவுள் உன்னை ஆசிர்வதிப்பார்.
© JINGLE BELL CREATIONS
அந்த அம்மாவின் செப்புக்காசு ரொம்ப சக்தி வாய்ந்தது.
பொய் சொல்லாதே!


சிறிது நாட்கள் கழித்து -
சலீம், இந்தத் தங்கக் காசுகள் உனக்குத் தான். உன்னால தான் நான் இத் தனை அதிர்ஷ்டம் அடைந்தேன்.
என்ன சொல்றே?
அந்த அம்மாவிடமிருந்து ஒரு செப்புக்காசு வாங்கி, விதைத்தேன்.
அது மறுநாள் முளைத்தது. ஒவ்வொரு நாளும் 100 தங்கக் காசுகளைத் தருகிறது.
© JINGLE BELL CREATIONS
அந்த மரம் எனக்கு வேண்டுமே!
சலீம் நிறையப் பணத்துடன் அந்த அம்மாவைத் தேடிச் சென்றான்.
ஆஹா! கண்டு பிடிச்சிட்டேன்.



அம்மா, என் சொத்து முழுவதையும் கொண்டு வந்துள்ளேன். இதற்குப் பதில் ஒரு செப்புக் காசு தாருங்கள்.
என்ன இது?
விளக்கமாகச் சொல்ல நேரமில்லை. உடனே கொடுங்கள்.
பைத்தியம் பிடித்து விட்டதோ?
வீட்டுக்குச் சென்ற சலீம், செப்புக் காசை விதைத்தான்.
இது வளர்ந்து மரமாகி, காசாகக் காய்க்கப் போகிறது.
சில நாட்கள் கழித்து -
இன்னும் இது முளைக் கலையே!
© JINGLE BELL CREATIONS
மறுநாள் -
உனக்குத் தெரியுமா? அந்தப் பேரீச்சம்பழ வியாபாரி பைத்தியமாகி விட்டான். காசை விதைத்து முளைக்குமா என்று பார்த்துக் கொண் டிருக்கிறான்.
பேராசைக்குக் கிடைத்த பரிசு!

தபால் தலைக்கான ஓவியம் வரையும் போட்டி 1981-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு முதல் பரிசு பெற்றது சமந்தா பிரௌன் என்ற ஐந்து வயதுச் சிறுமி. உலகிலேயே மிக இளம் வயதில் தபால் தலைக்கு ஓவியத்தை அமைத்தது சமந்தாவே!

- ஆர். ஆர். பூபதி, திண்டுக்கல்



எலி

கடலில் வாழும் 'க்ளோப் பிஷ்' என்ற ஒருவகை மீன் எதிரிகளிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்கு ஒரு தந்திரம் செய்கிறது. இது தன் எதிரியைக் கண்டால், உடனே வயிறு நிறையத் தண்ணீரைக் குடிக்கிறது. ஏராளமாக குடித்து, ஃபுட்பால் போல குண்டாகி விடுகிறது. இதைப் பார்க்கும் எதிரிகள் இதை விழுங்க முடியாது என்று நினைத்து அருகில் வருவதே இல்லை!

- மு. பெரியசாமி, விட்டுக்கட்டி

அமெரிக்காவில் நெப்ராஸ்கா வெஸ்லியன் பல்கலைக் கழகத்தில் கடந்த 2003ம் ஆண்டு டிசம்பர் மாதம் எலி போட்டி நடைபெற்றது. 23 எலிகள் போட்டியில் கலந்து கொண்டன. தடை தாண்டும் போட்டி, கயிற்றில் ஏறும் போட்டி, எடை தூக்கும் போட்டி என்று பல போட்டிகளில் எலிகள் சாகசம் புரிந்தன. முன்பு எலி ஒலிம்பிக்ஸ் என்று இந்தப் போட்டி அழைக்கப்பட்டது. கடந்த 18 ஆண்டுகளாக இந்தப் போட்டி நடைபெற்று வருகிறது.

- பூ. கவிதா, நாமகிரிப் பேட்டை



மட்டிப் பழம் என்ற பெயரில் ஒரு வாழைப் பழம் கேரளத்திலும் அதை ஒட்டிய

BITS POPCORN BITS POPCORN

ஒலிம்பிக்ஸ்



குமரி மாவட்டத்திலும் உண்டு. மணமோ அபாரம்; சுவையோ கேட்க வேண்டாம். பழமோ சிறிது, விலையோ பெரிது.

'மட்டு' என்றால் தேன். தேன் போல் இனிக்கும் பழம் 'மட்டுப் பழம்'. இந்த மட்டுப் பழம்தான் நாளடைவில் மக்கள் வாயில் புழங்கி 'மட்டிப்பழம்' ஆகி விட்டது.



- ராசப்பா,
ஆன்ஸ் ஆங்கிலப் பள்ளி,
பணகுடி

சிலந்தியின் வயிற்றில் இருந்து வெளிவரும் 'சிப்பனர் ரெட்' என்ற திரவமே, காற்று பட்டவுடன் சிலந்தி வலை உருவாக உதவுகிறது.

ஒரு பட்டுப் பூச்சியில் 4 கி.மீ நீளத்திற்குச் சமமான பட்டு நூல் உள்ளது.

ஒரு மழை மேகத்தில் 6 ட்ரில்லியன் நீர்த்துளிகள் இருக்கும்.

- கோ. செந்தமிழ்ச்
செல்வி,
செவிலிமேடு

புறாக்கள் பெரும்பாலும் உயரமான இடங்களில் வாழ்வதையே விரும்பும்.

கி.மு. 4500-ம் ஆண்டிலிருந்தே வீட்டுப் பறவையாக




BITS POPCORN BITS POPCORN



புறா வளர்க்கப்பட்டு வருகிறது. மனிதனால் பிடித்து வளர்க்கப் பட்ட முதல் பறவையும் இது தான். முதலில் இறைச்சிக் காகத்தான் புறாக்கள் வளர்க்கப் பட்டன. பின்னர் கடிதங்களைக் கொண்டு சேர்க்கும் தூதராகப் பயன்படுத்தப்பட்டன.

- பி. பாரதி, ஒன்பதாம் வகுப்பு,
அ.மே.நி.பள்ளி, ஆரணி

நாவல் என்ற சொல் தமிழி லும் சகஜமாக வழங்குகிறது.



இது இத்தாலிய மொழிச் சொல். அம்மொழியில் நாவல் என்றால் கதை என்று பொருள்.

- எம். அம்சலக்ஷ்மி, தென்பாதி

கடல் பாம்பு வகைகளே உலகில் அதிக விஷமுள்ளவை. இவை தெற்கு ஆஸ்திரேலியப் பகுதிகளில் வாழ்கின்றன. மற்ற விஷப் பாம்புகளைவிட 100 மடங்கு விஷம் வெளி யிடும் தன்மை இவற் றிடம் உண்டு.

- மு.நந்தகோபி,
பத்தாம் வகுப்பு,
பியர்ல் அறக்கட்டளை மையம்,
தர்மராஜபுரம்

சஹாரா பாலைவனத்தை நடந்தே கடந்தவர் ஒரே ஒரு வர்தான். அவர் ஜீயோ ஃபரி ஹவார்டு. இவர் தள்ளுவண்டி யில் தேவையான உணவுப் பொருள்களை எடுத்துக் கொண்டு, 3,200 கி.மீட்டர் தூரத்தை 100 நாளில் கடந்தார்.

- ஜெயஸ்ரீ, சங்கரன்கோவில்

பத்திரிகைகள் நடத்தும் குறுக்கெழுத்துப் போட்டியை முதன் முதலில் 1913 ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள 'நியூயார்க் வேர்ல்ட்' என்ற பத் திரிகை அறிமுகப்படுத்தியது. இதனை அறிமுகப்படுத்தியவர் 'ஆர்தர்வைனி'.

- ஆர். அம்பிகா, மதுரை

சீனப் பெருஞ்சுவரின் நீளம் 3, 460 கி.மீ. உலகில் 975 மில் லியன் மக்கள் சீன மொழியைப் பேசுகின்றனர். சீன மொழியில் 1500 எழுத்துகள் உள்ளன. சீனா வில் முதல் புத்தகம் கி.பி. 868 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது.

- நெ. பிரஜோற்பத்திகலை,
பெருமாத்தூர்

குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம் :

1. நவமணிகளில் ஒன்று (5)

5. உறவு என்பதை இப்படியும் அழைக்கலாம் (4)

6. ஒரு புள்ளியில் 4-ல் 1 பங்கு (5)

9. குழம்பு ருசிக்க இது அவசியம் (2)

10. ஆங்கிலத்தில் மதிப் பெண் (3)


12. இரண்டாவது தமிழ் மாதம் (3)

14. தானியங்களின் மேல் உறை (2)

17. குழந்தைகளுக்கு இந்தப் பால் நல்லது (5)

19. கருவிழி (4)

20. வெற்றிலை, பாக்கு, பூ, பழம் சேர்ந்தது (5)



மேலிருந்து கீழ் :

1. முக்கனியில் முதல் கனியின் முந்தைய நிலை (4)

2. இறைவனைக் குறிக்கும் மற்றொரு சொல். ஓர் எழுத்து இல்லை (3)

3. நீரில் மூழ்காது இது. சிறுவர்களுக்கு மிகவும் பிடித்த விளையாட்டுப் பொருள் (3)

4. குளிருக்கு இதமாய் இருக்கும் (4)

7. மூளைக்கு வேலை கொடுப்பது (3)

8. சுருங்கிய கோயம்புத்தூர், கொடியில் காய்த்து சிவக்கும் (2)

9. அன்பு சிந்த அன்னை ஊட்டினால் _________க்க வேண்டியதுதானே! (2)

10. மாமாவின் மனைவி (2)

11. வரிசை ஆங்கிலத்தில் (2)

13. வடை திருடிய பறவை (3)

14. தங்கத்தை இதில் வைத்து உரசிப் பார்க்கலாம் (4)

15. ஆங்கில புகைப்படத் தொகுப்பு (4)

16. ஆரவாரம் (3)

18. பாலைநிலம். இசையில் இது 7 உண்டு (3)

- மா. கண்ணன்,
ராஜபாளையம்

விடை 79ம் பக்கம்

போட்டியிலும் நிச்சயம் வெற்றி பெற்று விடுவானென்று போட்டிக்கு 'சம்மதம்' தெரிவித்தார்.

விரல் பிடிக்கும்

சொர்க்கபுரி நாட்டு மன்னன் மகேந்திரவர்மன். அவனுடைய ஒரே மகள் பொற்செல்விக்குத் தமது தமக்கையின் மகன் சுந்தரவர்மனை திருமணம் முடிக்க ஆசைப்பட்டார். ஆனால், பொற்செல்வியோ மந்திரியின் மகன் புகழேந்தியைத் திருமணம் செய்து கொள்ள ஆசைப்பட்டாள். இது மன்னருக்கும் தெரியும்.

பொற்செல்வி தன் தந்தையிடம், ''தந்தையே! தாங்கள் கூறியபடி நான் சுந்தரவர்மனையே திருமணம் செய்து கொள்கிறேன். ஆனால், நான் வைக்கும் போட்டியில் அவர் வெற்றி பெற வேண்டும். என்ன சம்மதமா?'' என்று கூறினாள்.

வீரனான சுந்தரவர்மன், தன் மகள் வைக்கும் எந்தப்

''சரி! போட்டி எப்போது?'' மன்னர் பொற்செல்வியிடம் கேட்டார்.




போட்டி!

ஸ்ரீரா. ரவிவர்மன்

''அடுத்த வாரம் இதேநாள் நம் அரண்மனைக்குப் பின் உள்ள மைதானத்தில் போட்டி நடக்கும். என்ன போட்டி என்றும் அங்கேதான் கூறுவேன்'' மன்னரிடம் பொற்செல்வி கூறினாள்.

போட்டி நடக்கும் நாளை மன்னர் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தார். அந்நாளும் வந்தது.

அரண்மனைக்குப் பின் உள்ள மைதானத்தில் மக்கள் அனைவரும்



போட்டியைக் காண திரண்டிருந்தனர். மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் மன்னர், பொற்செல்வி மற்றும் முக்கியப் பிரமுகர்கள் போட்டியைக் காண வீற்றிருந்தனர். மைதானத்தின் நடுவே மூன்று கூண்டுகள் வைக்கப்பட்டிருந்தன. அதற்குள் என்ன இருக்கிறதென்று தெரியாமல் நான்கு பக்கமும் அடைக்கப்பட்டிருந்தன. மேல் பக்கம் மட்டும் காற்றுக்காகத் திறந்திருந்தது. மைதானத்தில் சுந்தரவர்மன் போட்டிக்காக ஆயத்தமாக நின்றிருந்தான்.

பொற்செல்வி போட்டியை அறிவித்தாள்: "இங்கு மூன்று பெட்டிகள் உள்ளன. ஒவ்வொரு பெட்டியிலும் ஒரு காளை உள்ளது. மூன்று பெட்டிகளும் ஒவ்வொன்றாக திறந்து விடப்படும். சீறிவரும் காளையை சுந்தரவர்மன் அடக்க வேண்டியதில்லை. அதன் வாலைத் தொட்டாலே போதும். அவர் வெற்றி அடைந்ததாக அர்த்தம். அது மட்டுமல்ல, ஏதேனும் ஒரு காளையின் வாலைத் தொட்டாலே போதும். நான் அவரைத் திருமணம் செய்து கொள்கிறேன்" என்றாள்.

'சிங்கத்தின் குகைக்கே சென்று அதன் வாலைச் சீண்டியவன் இந்த சுந்தரவர்மன். சாதாரணக் காளை இது எனக்கு எம்மாத்திரம்?' மனதிற்குள் நினைத்துக் கொண்டான் சுந்தரவர்மன்.

முதல் கூண்டு திறக்கப்பட்டது. சீறி வரும் காளையைப் பார்த்த சுந்தரவர்மனுக்குச் சற்றே அதிர்ச்சி. அவன் இதற்கு முன் இவ்வளவு பெரிய காளையைப் பார்த்ததே கிடையாது. 'இதனிடம் அகப்பட்டால் அவ்வளவுதான்! அடுத்த காளையைப் பார்த்துக் கொள்ளலாம்' என்று ஒதுங்கிச் சென்றான். முதல்காளை கூட்டத்தினிடையே புகுந்து மறைந்தது.

இரண்டாவது கூண்டு திறக்கப்பட்டது. சீறி வரும் காளையைப் பார்த்த சுந்தரவர்மனுக்கு சற்றே மகிழ்ச்சி. ஏனெனில் இது முதல் காளையை விட அளவில் சற்றே சிறிதாக இருந்தது. மேலும், இது அதனை விட சற்று இளைத்திருந்தது. கொஞ்சம் சிரமப்பட்டால் அதன் வாலைத் தொட்டு விடலாம். ஆனால் சுந்தரவர்மன், 'இது முதல் காளையைவிட சற்றே சிறிதாகவும் இளைத்தும் காணப்படுகிறது. அடுத்த காளை இதனைவிட வலிமை குறைந்தே காணப்படும். எனவே, அதனைப் பார்த்துக் கொள்ளலாம்' என விட்டுவிட்டான். இரண்டாவது காளையும் கூட்டத்தினிடையே



அமைதிக்கான நோபல் பரிசு பெற்றிருக்கிறார்.

புகுந்து மறைந்தது.


மூன்றாவது கூண்டு திறக்கப் பட்டது. அதிலிருந்து வந்த காளையைப் பார்த்த சுந்தர வர்மனுக்கு மிகுந்த மகிழ்ச்சி. ஏனெனில், அது அவன் எதிர் பார்த்ததைப் போலவே முதலி ரண்டு காளைகளை விட மிகவும் இளைத்திருந்தது. மேலும் தள் ளாடியபடியே நடந்து வந்தது. மகிழ்ச்சியுடன் பாய்ந்து சென்று அதன் வாலைப் பிடிக்கப் போன வனுக்கு மிகுந்த அதிர்ச்சி. ஏனெ னில் அதற்கு வாலே இல்லை. சுந்தரவர்மன் எந்தக் காளையின் வாலையும் பிடிக்காததால் அவன் போட்டியில் தோற்று விட்டான்.

வாலில்லாத காளையை மூன் றாவது கூண்டில் அடைத்து, தன்னை பொற்செல்வி ஏமாற்றி விட்டதாக மன்னரிடம் புகார் கூறினான் சுந்தரவர்மன். அதற்கு பொற்செல்வி பதிலளித்தாள்.

''வாலில்லாத காளையை மூன்றாவது கூண்டில் நான் அடைத்து உன்னை ஏமாற்றி விட்டதால்தான் நீ தோற்றுவிட்ட தாகக் கூறுகிறாய். அப்படியென் றால் முதலிரண்டு காளைகளுக்கு வாலிருந்தனவே! அதனை ஏன் நீ பிடிக்கவில்லை? நான் ஏமாற்றிய தால் நீ தோற்கவில்லை. 'அடுத்த தடவை பார்த்துக் கொள்ளலாம்' எனும் உன் அலட்சியப்போக்கு தான் உன்னைத் தோற்கடித்தது. வாய்ப்புகள் அனைவருக்கும் ஒரு தடவைதான் வரும். ஆனால் உனக்குக் கிடைத்த இரண்டாவது வாய்ப்பையும் நீ தவற விட்டு விட்டு நான் உன்னை ஏமாற்றிய தாக கூறுகிறாய்...'' பொற்செல்வி முடிக்கவில்லை.

மன்னர் இடைமறித்து, ''சுந்தர வர்மா! பொற்செல்வியை உனக் குத் திருமணம் செய்து வைக்க நான் ஆசைப்பட்டேன். ஆனால் உன் அலட்சியப் போக்கால் நீ, அவள் வைத்த போட்டியில் தோற்றுவிட்டாய். மன்னராகப் போகும் ஒருவருக்கு எந்த விஷ யத்திலும் அலட்சியப்போக்கு இருக் கக் கூடாது. கிடைக்கும் வாய்ப்பு களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவருடைய ஆட்சியில் மக்கள் நலமாக இருப்பார்கள். எனவே, பொற்செல்வி விரும்பியபடி அவளுக்கு அறிவும் திறமையும் உள்ள மந்திரியின் மகன் புகழேந்தி யையே திருமணம் செய்து வைக் கப் போகிறேன்'' என்று கூறினார்.

கூடியிருந்த மக்கள் அனை வரும் மகிழ்ச்சியில் ஆர்ப்பரித் தனர்.



''என்னது ஒரே செக் ரெண்டு முறை கிடைச்சுதா? எப்படி?''

''முதல் தடவை நீங்க குடுத் தீங்க. ரெண்டாவது தடவை பணமில்லைனு பேங்கிலிருந்தும் திருப்பிக் குடுத்தாங்க!''

- அரிச்சந்திரன்

விடுகதைப் பக்கம்

திங்க முடியாத தங்க மாம்பழம்!



I. 1. பச்சை சேலைக்காரி, முத்துப் பல்லழகி - அவள் யார்?

2. அடர்த்தியான காட்டுக்குள்ளே எங்கண்ணன் புகைபிடித்து போகிறான் - அவன் யார்?

3. வட்டமான குளத்திலே, வற்றாத ஈரத்திலே, கெண்டைமீன் துள்ளுது! - அது என்ன?

- ஜோதி, ஸ்ரீபெரும்புதூர்

II. 1. நீரில் பிறந்து, நீரில் வளர்ந்து, வீதி வலம் வந்து, வீட்டில் அழியும் வெண்ணிறப்பூ - என்ன பூ?

2. கையுண்டு காலுண்டு, கனத்த உருவமுண்டு, பானை போல் வயிறுண்டு விநாயகரும் அல்ல - அது என்ன?

-வி.பி.மதிமலர், ஒன்பதாம் வகுப்பு, பிஷப்ரோச் மேல்நிலைப் பள்ளி, இடிந்தகரை

III. 1. இரைச்சலோடு செல்லும் விமானமுமல்ல, இடியோசை தரும் மேகமுமல்ல - அது என்ன?

2. தேடாமல் கிடைக்கும் பல், தேடும் செல்வத்தைக் குறைக்கும் பல் - அது என்ன?

3. திங்க முடியாத தங்க மாம்பழம் - அது என்ன?

- யாஸ்மீன், ஆறாம் வகுப்பு, பியர்ல் அறக்கட்டளை மையம் தர்மராஜபுரம்

IV. 1. உதிர்த்தால் ஓடிடுவான்; காற்றடித்தால் பறந்திடுவான்; வெயில் பட்டால் உலர்ந்திடுவான் - யார் அவன்?

2. ஓடையில் ஓடாத நீர்; உப்புக் கரிக்கும் நீர் - அது என்ன?

3. இரவல் கிடைக்காதது; இரவில் கிடைப்பது - அது என்ன?

- ஜி. விஷ்ணுகிரி, ஏழாம் வகுப்பு, அரசு உயர்நிலைப்பள்ளி, ஆலங்கொம்பு.

விடைகள்

I. 1. வெண்டைக்காய் 2. ரயில் வண்டி, 3. நாக்கு

II. 1. உப்பு, 2. யானை

III. 1. வானவெடி, 2. சோம்பல், 3. நெருப்பு

IV. 1. மழை, 2. கண்ணீர், 3. தூக்கம்



காந்தலக்ஷ்மி சந்திரமெளலி எழுதும்

மர்மப் புத்தகம்!

- விறுவிறுப்பான புதிய தொடர்கதை ஆரம்பம்

உங்கள் பிரதிக்கு உள்ளூர் ஏஜெண்டிடம் சொல்லி வையுங்கள்.

மனமே நலமா?

அன்புள்ள
டாக்டருக்கு,

நான் ஆறாம் வகுப்பில் படிக்கிறேன். நானும் வருணாவும் வகுப்புத் தோழிகள். எங்கள் வகுப்பில் கோகிலா என்றொரு தோழி படிக்கிறாள். அவளுக்கு நாங்கள் நல்ல தோழிகளாக இருப்பது பிடிக்கவில்லை. அதனால் எங்களைப் பற்றி வகுப்பாசிரியையிடம் கோள் சொல்லித் திட்டு வாங்கித் தருவாள். சமீபத்தில் நான் இல்லாத நேரங்களில் வருணாவிடம் என்னைப் பற்றிக் கோள் சொல்லியிருக்கிறாள். இப்போது வருணாவும் என்னுடன் சரியாகப் பேசுவதில்லை. இதனால் மனம் சங்கடப்படுகிறேன். எங்கள் நட்பு பழைய நிலைக்குத் திரும்ப என்ன செய்யலாம்?

- த. அகிலாண்டேஸ்வரி,
மதுரை

கோள் சொல்லும் பழக்கம் குழந்தைகள் முதல் பெரியோர் வரை எல்லா வயதினருக்கும் உள்ளது. இது ஒரு நடத்தைக் கோளாறு. மனம் தொடர்பானது. வீட்டில் அல்லது உறவினரிடத்தில் அன்பு கிடைக்காதவர்கள், தங்களைப் பிறர் மதிப்பதில்லை என்று குறைபட்டுக் கொள்பவர்கள், பொறாமைப்படுபவர்கள், சகிப்புத்தன்மை குறைவாக உள்ளவர்கள், தாழ்வு மனப்பான்மை கொண்டவர்கள் போன்றோர்தான் கோள் சொல்லும் பழக்கத்துக்கு உள்ளாகிறார்கள். இப் பழக்கம் பரம்பரைத் தன்மை காரணமாகவும் வருகிறது.

கோள் சொல்வதில் இரு வகையினர் உண்டு. உண்மைக் கோள் சொல்லிகள்; பொய்க் கோள் சொல்லிகள். நடந்ததை அப்படியே சொல்வது உண்மைக்கோள். எடுத்துக்காட்டாக

கோள் சொல்லிக் கோகிலா!



டாக்டர் கு. கணேசன்



ஒருமுறை கிள்ளியதற்கு 'பொழுதன்னைக்கும் கிள்ளிக்கிட்டே இருக்கிறா டீச்சர்' என்று கூறுவது. பொய்க்கோள் என்பது நடக்காததை நடந்ததாகக் கூறுவது. இதற்கு எடுத்துக்காட்டு - யாரும் பக்கத்தில் கூட போயிருக்க மாட்டார்கள். 'என்னைக் கீழே தள்ளி விட்டுட்டா, டீச்சர்' என்று பொய் உரைப்பது. உண்மைக் கோள் சொல்வதற்குப் பெரும்பாலும் வலுவான காரணம் இருப்பதில்லை. அதேநேரத்தில் பொய்க்கோள் சொல்பவர்கள் தங்களுடைய மகிழ்ச்சிக்காக மற்றவர்களைத் துன்புறுத்தும் நோக்கில் உண்மைக்குப் புறம்பாகச் சொல்வதற்குத் தயங்கவே மாட்டார்கள். உன் வகுப்புத் தோழி கோகிலா இரண்டாம் வகையைச் சேர்ந்தவள். அவளுக்குள் இருக்கும் பொறாமையையும் தாழ்வு மனப்பான்மையையும் கலைந்துவிட்டால் போதும், கோள் சொல்லும் பழக்கம் நின்றுவிடும்.

அதற்கு நீ செய்ய வேண்டியது இதுதான் : கோகிலாவுடன் பகைமை பாராட்டுவதைத் தவிர்த்துவிட்டு அவளுடன் அன்பாகப் பழகத் தொடங்கு. அவளுக்கு வீட்டுப்பாடம் செய்வதில், விளையாட்டில், மதிய உணவு நேரத்தில் இப்படி ஏதாவது வாய்ப்பு கிட்டும் போதெல்லாம் உன்னாலான சிறு உதவிகளைச் செய். அவள் செய்யும் சிறு செயல்களைக் கூட நிறைவாகப் பாராட்டு; ஊக்கப்படுத்து. (எ-டு. 'இன்றைக்கு உன் தலை அலங்காரம் நன்றாக இருக்கிறது கோகிலா!) உன் அன்பையும் திறமையையும் அவள் உணர்ந்து கொள்ளும்போது பொறாமை மறையும். நீ தரும் ஊக்கத்தினால் அவளுக்குத் தன்னம்பிக்கை பிறக்கும்; தாழ்வு மனப்பான்மை நீங்கும். உங்கள் நட்பு வளர வளர அவள் உன் மீது கோள் சொல்வதை விட்டு விடுவாள்.

அடுத்து உன் நெருங்கிய தோழி வருணாவிடம் மனம் விட்டுப் பேசு. உங்கள் நட்பில் விரிசல் விழுவதை நீ விரும்பவில்லை என்பதைத் தெரியப்படுத்து. 'நீ எந்தத் தவறும் செய்யவில்லை' என்பதை கோகிலா மூலமே தெரிவித்து விடு.

தொலைவில் தெரியும்

சுந்தர வனக்காட்டில் சுதந்திரமாக சுற்றித் திரிந்த தும்பி



துரையழகனுக்கு தன் நண்பர்களான ஈசல் இன்பத்தையும் காளான் கனகத்தையும் கண்டவுடன் துள்ளிக் குதித்து ஆடத் தோன்றியது.

துரையழகன் தும்பி பக்கத்து நகரில் தான் நேரில் கண்ட காட்சியைத் தன் தோழர்களுக்கு விவரிக்கலானது.

''நகரத்து சிறுவர்களில் ஒருவன் கையில் (தேங்காய் ஓடு) சிரட்டை ஒன்றைப் பிடித்தபடி முன்னே சென்றான். அவனைத் தொடர்ந்து மற்றவர்கள் வரிசையாக சென்றனர். முதலாவதாக சென்றவன் கையிலிருந்த சிரட்டையிலிருந்து கண்களைக் கூச வைக்கும் விதமாக ஒளி வெள்ளம் வெளியே பாய்ந்து வந்து இருட்டை விரட்டியடித்தது. இது மாதிரி ஒரு விளக்கு நமக்கும் கிடைச்சா இந்தக் காட்டை இரவு முழுவதும் ஒளியால நிரப்பிடலாமே!'' என்று தும்பி துரையழகன் கூறி முடித்தது.

''நீ பார்த்த சிரட்டைக்குள்ளிருந்து ஒளியைத் தந்த பொருள் என்னன்னு பார்த்தாயா?'' ஈசல் இன்பம் தன் நண்பனிடம் கேள்வி கேட்டது.

தும்பியின் விளக்கு!

''ஒருவேளை தூக்கணாங் குருவி செய்யற மாதிரி மின் மினிப் பூச்சிகளைப் பிடிச்சு சிரட்டைக் குள்ள வச்சிருப் பாங்களோ?'' தன் கருத்தை வெளி யிட்டது காளான் கனகம்.

''இந்தச் சந் தேகமெல்லாம் எதுக்கு? காட்டுல மெக்கானிக் வேலை செய்யுற கரடி காளிங்கன் கிட்ட இதுபத்தி சொன்னால், நீ பார்த்த மாதிரி ஒரு விளக்கை செஞ்சு தந்துருவாரே!''

இவர்கள் கரடி யாரின் வீட்டை அடைவதற்கும் வெளியே சென் றிருந்த காளிங்கன் கரடி வருவதற்கும் சரியாக இருந்தது.

கரடி காளிங் கனிடம் தான் கண்டதைக் கண்டபடி துரையழகன் தும்பி கூறியது.

''நாட்டுப் பக்கம் ஒருநாள்

பா. முருகேசன்

நானும் சென்று வந்தேன்
நல்ல இருளில் அங்கே



நானொரு அதிசயம்
கண்டேன்
ஓட்டமாய் சிறுவர்
ஓடியபோது
வட்ட வடிவ சிரட்டை
ஒன்றை

வலது கையில் பிடித்தபடி,
ஒருவன் முன்னே ஓடி
வந்தான்
ஒளியால் இருளினை
விரட்டி வந்தான்
கிட்டே சென்று
பார்க்கும்முன்
சிட்டாய் பறந்து அவன்
மறைந்தான்

எங்களுக்கும் அது மாதிரி ஒரு விளக்கு செஞ்சு தர உங்களால முடியுமா?'' தும்பி துரையழகன் தன் ஆசையை வெளிக்காட்டியது.

''செய்யலாம். அதுக்கு முதல்ல ஒரு பெரிய சிரட்டை வேணும், சிரட்டைக்காக தென்னை மரத்திடம் சென்று ஒரு தேங்காய் வாங்கி அதைக் குரங்கு குஞ்சப்பன் தாத்தா கிட்ட குடுத்து சிரட்டையை மட்டும் வாங்கி, வாங்க. அதோட அதுக்குள்ள வச்சு எரிய விடுறதுக்கு மெழுகு வேணும். அந்த ஓரத்துல வளர்ந்திருக்கிற ஆமணக்கு செடிகளோட விதைகளை எடுத்து பருப்பைச் சேர்த்து மெழுகாக்கி எரிக்கலாம். அதனால கொஞ்சம் ஆமணக்கு விதைகளையும் வாங்கி, வாங்க. மெழுகுல வக்கிறதுக்கு திரி செய்யணும், அதுக்காக பருத்திச் செடியிடம் சென்று கொஞ்சம் பருத்தி வாங்கி வாங்க'' என்று தன் தேவைகளைக் கூறியது காளிங்கன் கரடி.

கரடியாரின் தேவைகளைக் கேட்ட நண்பர்கள் கூடி ஆலோசனை செய்து ஆளுக்கு ஒரு வேலையாகப் பிரித்துக் கொண்டன.

ஆவல் மேலிட உடனடியாக பறந்து சென்ற தும்பி துரையழகன் அந்தக் காட்டிலிருந்த உயர்ந்த தென்னை மரத்தை அடைந்து,

''நீண்டு வளர்ந்த தென்னை
மரமே
விளக்கு ஒன்றை
செய்வதற்காய்
விளைந்த தேங்காய்
ஒன்றெனக்கு
உதிர்த்து தந்து உதவி
செய்தால்
உடனே சென்று நானதனை
உயர்ந்த விளக்காய்
செய்திடுவேன்
ஒளியால் காட்டை
நிரப்பிடுவேன்'' என்றது.

தென்னை மரமும் தும்பி துரையழகன் மேல் இரக்கம் கொண்டு ஒரு முற்றிய தேங்காயைக் கொடுத்தனுப்பியது.

அதைப் பெற்றுக் கொண்ட

யார் அந்தப் பிரபலம்?



மகாத்மா காந்தியிடம் பெரு மதிப்பு கொண்டு அவர் குறித்த புத்தகங்களை நிறையப் படித்த வெளிநாட்டுக்காரர்.

துரையழகன் தும்பி வயதான குரங்கார் குஞ்சப்பனிடம் கொடுத்து உரித்து, தேங்காய் சில்லினை உரித்ததற்கு கூலியாக வைத்துக் கொண்டு சிரட்டையை மட்டும் தனக்கு கொடுத்தால் போதும் என்றது.

தான் உண்பதற்கு தேங்காய் கிடைத்ததற்காக மனம் மகிழ்ந்த குஞ்சப்பன் குரங்கு அதை உடனடியாக உரித்து உடைத்து சிரட்டையை மட்டும் தும்பியிடம் கொடுத்தனுப்பியது.

இதற்கிடையே பருத்திச் செடியைத் தேடிச் சென்ற ஈசல் இன்பம் காடு முழுவதும் தேடி அலைந்து கடைசியில் நாட்டை ஒட்டிய வயலில் இருந்த பருத்திச் செடியைக் கண்டது.

"பதமாய் வளர்ந்த பருத்திச்
செடியே!
பறந்து வந்தேன் ஈசல்
நானே!
நாட்டில் நண்பன்
தும்பியவன்
நேற்று கண்ட விளக்கது
போல்
நல்ல விளக்கைச்
செய்வதற்கு,
அழகிய திரியாய் நீ எனக்கு
கொஞ்சம் பருத்தி
தந்துவிட்டால்
பறந்து எடுத்துப் போவேன்
நான்
ஒளியால் காட்டை
நிரப்பிடுவேன்!" என்றது.

ஈசல் இன்பத்தின் ஆசைப்படி பதமான பருத்தியைப் பருத்திச் செடி கொடுத்தனுப்பியது.



"ஆடி வந்தால் எனக்கு 10 வயதாகிறது"

"அப்போ ஆடாம வந்தால்?"

- ஆர்.அம்பிகா, மதுரை

அங்கே ஆமணக்கு விதைகளைத் தேடிப் போன காளான் கனகம் தன்னால் சுமக்குமளவு ஆமணக்கு விதைகளைச் சேகரித்து சுமந்து வந்தது. பருப்புகளைக் கரடி காளிங்கன் நன்றாக கைகளால் பிசைந்து அதனுள் பருத்தியை உருட்டி திரியாக்கி வைத்து விட்டதால் அழகான மெழுகுவர்த்தி போல தோற்றமளித்தது.

தான் தயாரித்த மெழுகுவர்த்தியைச் சிரட்டையின் உட்புறத்தில் நிற்கச் செய்த கரடியார் அதைப் பற்ற வைத்தார். அதனுள்ளிருந்து பாய்ந்த ஒளி வெள்ளம் காடு முழுவதும் பாய்ந்தது. அந்த ஒளியைக் கண்ட விலங்குகளும் பறவைகளும் பரபரப்பாக எழுந்தன.

பிற விலங்குகளும் பறவைகளும் அதிசயமாக தன் விளக்கைக் கண்டு ரசிப்பதைக் கண்ட துரையழகன் தும்பி தலைகால்

என்ன சொன்னான்?



- அ.ம. பர்ஜானா, சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி

புரியாமல் ஆடிப் பாடத் துவங்கியது.

"நாட்டில் நான்கண்ட
விளக்கு போல்
நல்ல விளக்கின் மேற்புறத்தை
நீண்ட தென்னை
தந்துவிட்டார்
திரியால் இதனை
எரிப்பதற்கு
பஞ்சை பருத்திச் செடி
தந்தார்
உருண்ட ஆமணக்கு
விதைகளையே
உரித்து விளக்காக்கி
எனக்குத் தந்தார் சுரடியார்
அற்புத விளக்கிதைப்
பாருங்கள்
எத்தனை வெளிச்சம்
காணுங்கள்!"

என்று ஆடிப்பாடியபடி வந்த தும்பியின் பின்னால் ஈசல் இன்பமும் காளான் கனமும் வந்தன.

அப்போது அவ்வழியாக வந்த மேகக் கூட்டம் ஒன்று படாரென இறங்கி வந்து அந்த விளக்கைப் பறித்து வானத்தை நோக்கிச் சென்றுவிட்டது.

தாங்கள் கஷ்டப்பட்டு செய்த விளக்கை மேகம் தூக்கிச் சென்றதை சத்தமாகச் சொல்லி அழத் துவங்கின அவை மூன்றும். இவர்களின் அழுகுரலைக் கேட்ட காற்று விரைந்து சென்று மேகத்தைத் தாக்க, மேகம் கண்ணீர் விட்டபடி இவர்களின் விளக்கைத் தூரமாக இருந்தபடி இவர்களின் கண்ணுக்குத் தெரியுமாறு காட்டியதே தவிர இவர்களிடம் தர மறுத்து விட்டது.

இன்றும்கூட தும்பியும் ஈசலும் காளானும் தங்களது விளக்கைக் காண வேண்டும் என காற்றிடம் கூற காற்று மேகத்தைத் தாக்க, மேகம் மழையாக அழுது மின்னலாக இவர்களின் விளக்கைக் காட்டுவதை நாமும் காணலாம்! ●

நாய்க்கு நன்றி!

ஸ்காட்லாந்தில் கிளார்க் என்று ஒருவர் இருந்தார். ரொம்ப வசதியானவர் இல்லை. தன்னுடைய வாழ்நாளில், ஒரு தடவையாவது குடும்பத்துடன் அமெரிக்காவுக்குப் போய் விட்டு வரவேண்டும் என்று ஆசை. அமெரிக்காவுக்குப் போக வேண்டுமென்றால், நிறையப் பணம் வேண்டுமே! எனவே தினமும் தான் சம்பாதிப்பதில் கொஞ்சம் பணத்தை, சேமிக்க ஆரம்பித்தார்.

சில வருடங்களில் கணிசமான பணம் சேர, கிளார்க் குடும்பத்தினர்,

பசுவின் உடம்பை உற்றுப் பாருங்கள். கறுப்பு நிறத்தில் உலக வரை படம் கண்ணில் படுகிறதா? அட! இது நிஜமில்லை. கிராஃபிக்ஸ் வேலை தான்!





சட்டென்று பார்த்தால் பச்சை நிறத்தில் ஒரு காரும் மஞ்சள் நிறத்தில் ஒரு வேனும் அடுத்தடுத்து நிற்பதுபோல இருக்கிறதா! ஏமாந்து போனீர்கள். ஒரு மஞ்சள் வேனுக்கு, இப்படி இரட்டை பெயிண்ட் அடித்து, நன்றாகவே ஏமாற்றி விட்டார்கள்.

நெட் பிட்ஸ்

குதூகலமாக அமெரிக்கா செல்வதற்கான ஏற்பாடுகளில் இறங்கினார்கள். கப்பலில் சாமானிய மக்களுக்கான வகுப்பில், டிக்கெட் பதிவு செய்யப்பட்டது.


புறப்படுவதற்கு ஒரு வாரம் முன்பு, எதிர்பாராத சம்பவம் நடந்தது. கிளார்க்கின் மகனைத் தெருவில் ஒரு நாய் கடித்துவிட்டது. தெரு நாய்க் கடித்தால், ரேபிஸ் என்ற உயிர் பலி கொள்ளும் நோய் வர வாய்ப்புண்டு என்பதால் உடனடியாக மருத்துவமனையில் அந்தப் பையனைச் சேர்த்தார்கள்.

மகனை நாய்க் கடித்துவிட்ட சோகம் ஒரு பக்கம் என்றால், அமெரிக்கா போக முடியாமல் போய்விட்ட சோகம் இன்னொரு பக்கம். எல்லாவற்றுக்கும் காரணமான அந்தத் தெரு நாயைச் சபித்தார்.

குறிப்பிட்ட தினம் வந்தது. கப்பல் அமெரிக்கா புறப்பட்டுச் சென்றது.

கப்பல் நடுக்கடலில் பனிப் பாறையில் மோதி, உடைந்து கடலில் மூழ்கிவிட்டது என்ற செய்தி வந்தது. கிளார்க் குடும்பத்தினர் ஆண்டவனுக்கு மட்டுமின்றி தெருநாய்க்கும் நன்றி கூறினார்கள்.

மூழ்கிய அந்தக் கப்பல் டைட்டானிக்.



ஜானி வால் பையன். ஒரு நாள் இரவு தன் வீட்டுத் தோட்டத்தில் மரத்தின்கீழ் நின்று கொண்டு இருந்தான். திடீரென்று ஒரு நாய் குரைத்தது. ஜானி சும்மா இருப்பானா? நாய் போலவே தானும் பதிலுக்குக் குரைத்தான். அந்தப் பக்கத்திலிருந்து மறுபடி ஒரு குரைப்பு சத்தம் வந்தது. இவன் பதில் கொடுத்தான். இதே போல பத்து நிமிடங்கள் குரைப்பும் பதில் குரைப்பும் தொடர்ந்தது. மறுநாளும் அதே நேரத்தில், ஜானி மரத்தடியில் ஆஜராகிவிட்டான். நாய் குரைக்கும் சத்தம் கேட்டதும் பதிலுக்குக் குரைத்தான். இப்படியே பத்து நாட்கள் ஓடிவிட்டன.



ஜேம்ஸின் அம்மா, எதேச்சையாக பக்கத்துவீட்டு பெண்மணியைச் சந்திக்க, பேச்சு பையன்களைப் பற்றித் திரும்பியது. "என்னவோ போங்கள்! தினமும் ராத்திரி தோட்டத்தில் நின்று கொண்டு, என் மகன் ஜேம்ஸ் நாய் மாதிரி குரைக்கிறான்! சகிக்கலை!" என்றார்.

அதைக்கேட்டுவிட்டு, ஜானியின் அம்மா சொன்னார். "இங்கே மட்டுமென்ன! அதே கதைதான்!"




ஒரு பெண்ணை பள்ளிக் கூடத்தில் சேர்த்தார்கள். ஒரு வாரம் ஆனது. பள் ளிக் கூடம் விட்டு வந்தவள் தன் அம்மா விடம் சொன்னாள். "ஸ்கூல் போகவே எனக்குப் பிடிக்க வில்லை"

"ஏன்?" என்று கேட்டார் அம்மா.

"எனக்கு படிக்கத் தெரியாது; 'படி படி' என்கிறார் டீச்சர். எழுதத் தெரியாது. ஆனால் எழுதச் சொல்கிறார். பேசத் தெரியும். ஆனால் நான் ஏதா வது பேச வாயைத் திறந்தாலே, 'பேசாதே! வாயை மூடு' என்கிறார்!"

* டைட்டானிக்




ஆகஸ்ட் 20ம் தேதிதான் கொசு தினம். 1897ம் ஆண்டு ஆகஸ்ட் 20ம் தேதி. சர் ரொனால்டு ராஸ் என்கிற பிரிட்டிஷ் டாக்டர், ஹைதரா பாத்தில் கொசு வால்தான் மலே ரியா ஜுரம் பரவு கிறது என்று தனது ஆராய்ச்சியின் பல னாகக் கண்டுபிடித்தார். அதன் பின்னரே, மலேரியா ஜுரத்தை ஒழிக்கும் பணி, முடுக்கிவிடப் பட்டது.

இன்றும்கூட மலேரியா ஜுரம் நூற்றுக்கும் அதிகமான நாடுகளில் வசிக்கும் இருபத்தி நாலுகோடிபேரை வருஷம் தோறும் பாதிக்கச் செய்கிறது.

உத்திரப் பிரதேசத்தின் தலைநகரான லக்னோ நகரில் உள்ள ஓர் உணவகத்தின் பெயர் என்ன தெரியுமா? லாலு ஜங் ஷன் ஹோட்டல். இந்த உண வகத்தின் உட்புறத்தை ஒரு ரயில்வே ஸ்டேஷன் பிளாட் பாரத்தைப் போலவே உருவாக்கி யிருக்கிறார்கள். இங்கு பணி புரியும் பணியாளர்கள், ரயில் நிலையங்களில் சுமை தூக்குகிற 'போர்ட்டர்கள்' மாதிரியே சிவப்பு சீருடை அணிந்திருக்கிறார்கள். இங்கே வழங்கப்படும் உணவு ஐட்டங்களுக்கெல்லாம் பிர பலமான எக்ஸ்பிரஸ் ரயில் களின் பெயர்கள் சூட்டப்பட்டுள் ளன.

ஜெட் பிட்ஸ்


அம்மாவைத் தேடி...
6
கதை வாண்டுமாமா
சித்திரம் மகேஸ்
வசந்தா காணாமல் போவா. தூண்டில் புழுவைக் கொண்டு பெரும் தொகையை ஒதுக்கிடலாம்.
நல்ல திட்டம் பாஸ்...
இவங்க திட்டம் என்ன?
அகிலா! இங்கயா இருக்கே? மம்மியைப் பிரிந்திருக்கிறது கஷ்டம் தான்.
ஆ... ஆமாம் இளங்கோ சார்!
அவர்கள் பேச்சை நான் கேட்டதாகக் காட்டிக்கக் கூடாது. இல்லையேல் அவர்கள் திட்டத்தை அறிய முடியாது.
கவலைப் படாதே பாப்பா. இந்த இளங்கோவன் உன் தோழன்.
பாஸ்! பாப்பாவை ஸ்கூல்லே கொண்டு விடணுமா?
ஸ்கூலா? அம்மா ஏதும் சொல்லலியே...!
எப்படி இவங்களைச் சமாளிக்கப் போறேன்னு தெரியலை லட்டு. இளங்கோ சொல்றபடி கேட்டாகணும். அம்மா என்னை அவன் பொறுப்பில் விட்டிருக்கா.


ஆனா... அம்மா காணாமல் போவான்னானே.. செத்துப் போவாங் கற மாதிரி... லட்டு நான் என்ன செய்வேன்?
அகிலா, அம்மா வரும்வரை நீ இங்கே தான் தங்கிப் படிக்கப் போறே. வசதியான ஸ்கூல்.
சிறைச்சாலை போலிருக்கு.
அகிலாவை, பள்ளியைச் சுற்றிப் பார்க்க அனுப்பிவிட்டு, இளங்கோ அந்த போர்டிங் பள்ளியின் தாளாளரின் அறையில் -
அந்தப் பெண் மீது ஒரு கண் இருக்கணும் இந்திராம்மா. முன்பே, தாயை தேடிக்கிட்டு ஓடின பெண்ணு அது.
கவலையே பட வேண்டாம் இளங்கோ. இந்தப் பள்ளியிலிருந்து வெளியே போறது சுலபமில்லை.
வெளியே தோட்டத்தில்-
நீதான் அகிலாவா? சினிமா நடிகையோட பெண்ணா?
ஆ... ஆமா...
இனி நீயும் எங்களோட தோழி!
தேங்ஸ்


நல்ல பெண்கள்
ஏய்! பொண்ணு...
நீதானே புதுப்பொண்ணு. அகிலா? சரி... இதென்னது - தெருநாய்? இதுக்கு இங்கே என்ன வேலை?
லட்டு என் வளர்ப்பு நாய்.
எதிர்த்துப் பேசறியா? வளர்ப்பு நாய்களை இங்கு அனுமதிப்ப தில்லே. இதைச் சங்கிலியால கட்டிப்போடு. என்ன செய்வது என்பதை முடிவு செய்யும் வரை.
அன்றிரவு அகிலா தூங்கவில்லை.
பாவம் என் லட்டு. என்னைப் போல நீயும் கைதி. அம்மா நல்லா இருக்காங்களான்னு தெரியல்லே...


மறுநாள்-
அவர்கள் என்னைச் சுட்டிக்காட்டிப் பேசுகிறார்களே. செய்தித்தாளில் ஏதோ இருக்கிறது.
நான் அதைப் பார்க்கலாமா?
பிரபல சினிமா நடிகை
கடத்தப்பட்டார்
வெளிநாட்டுக்குப் படப்பிடிப்புக்காக செல்லவிருந்த வசந்தாவின் கார் மறிக்கப்பட்டு அவர் கடத்தப்பட்டார்...
தனியா உட்கார்ந்து யோசிக்கலாம்!
அகிலா எங்கே போறே?
வசந்தாவின் கார் விமான நிலையம் வரவில்லை. வெகுநேரக் காத்திருப்புக்குப்பின், நடிகை கடத்தப்பட்டது தெரிய வந்தது...
லட்டு, அம்மா உயிரோடு இருக்காளா... இல்லே...
(தொடரும்)


கோகுலம்
போஸ்டர்


ஸ்மைல் ப்ளீஸ்...

அன்புள்ள ஜக்கு...



L போஸ்ட்

● பா. சங்கர், மாதேசம்பாளையம்

? புகை ஏன் வானை நோக்கிப் போகுது ஜக்கு?

புகை மேலே செல்ல புவி ஈர்ப்பு விசைதான் காரணம். புவி ஈர்ப்பென்றால் கீழ் நோக்கித் தானே வரவேண்டும் என்று நினைக்கிறீர்களா? காற்றின் அடர்த்தியைவிட புகையின் அடர்த்தி குறைவு. அதனால் புகையை விட காற்றின் மீது



புவி ஈர்ப்பு விசை அதிகமாக இருக்கும். இதனால் காற்று கீழே இறங்க, புகை மேல் நோக்கிச் செல்கிறது சங்கர்.

● கே. மாலா, மன்னார்குடி

? இந்தியாவில் தற்போது எத்தனை மாநிலங்கள்? எத்தனை யூனியன் பிரதேசங்கள்?

28 மாநிலங்கள்; 7 யூனியன் பிரதேசங்கள்.

● ப.காளிதாசன், நீர்விளங்குளம்

? கேள்வி கேட்பது கடினமா? பதில் சொல்வது கடினமா ஜக்கு?

சிறந்த கேள்விகளைக் கேட்பது தான் என்னைப் பொறுத்தவரை கடினம் காளிதாசன். நல்ல கேள்வி கிடைத்தால் அதுக்குப் பதில் தேடுவது சுலபம்தான்! (நீங்கள் எல்லாம் எவ்வளவு கஷ்டப்பட்டு கேள்வி கேட்கறீங்க!)

● எம்.வினோத், சங்கரன்கோவில்

? ஜக்கு, இதுவரை 15 செ.மீ. x 23 செ.மீ. ஆக இருந்த கோகுலத்தின் அளவு 13 செ.மீ. x 19 செ.மீ. ஆகிவிட்டது. ஆனால் உனக்கு மட்டும் அதே இரண்டு பக்கங்கள்தானா? ஆசிரியரிடம் சண்டை போட்டு கூடுதலாக

ஒரு பக்கம் கேள்.

உங்கள் கேள்விக்குப் பிறகாவது பக்கங்களை ஆசிரியர் அதிகப்படுத்துகிறாரா என்று பார்ப்போம் வினோத்.

● கே.எஸ். சரவணன், திருவாரூர்

? மங்கல இசை - மங்கள இசை எது சரி ஜக்கு?

மங்கள இசைதான் சரி சரவணன்.

● வி.கலாதேவி, இடைப்பாடி.

? பச்சைக் காய்கறிகளைச் சாப்பிட்டால் ஜீரணம் ஆகுமா?

நீங்கள் என்ன முருங்கைக் காய், கத்தரிக்காய், அவரை, பீன்ஸ், உருளை என்றா சாப்பிடப் போகிறீர்கள்? கேரட், பீட்ரூட், வெள்ளரி, முட்டைக் கோஸ், முள்ளங்கி போன்றவற்றைச் சாப்பிடுவதால் ஜீரண பிரச்னை ஏற்படாது. பச்சைக் காய்கறிகள் உடலுக்கு மிகவும் நல்லது. பயப்படாமல் அளவோடு சாப்பிடுங்கள் கலா.

● ஏ.என்.ஹகீம் அர்சாத், சென்னை

? கார்களில் L



மாட்டுவது ஏன்?

போர்டு மாட்டுவது ஏன் ஜக்கு?

புதிதாக கார் ஓட்டக் கற்றுக் கொள்பவரை Learner என்று ஆங்கிலத்தில் அழைப்பார்கள். இவர் கார் ஓட்டும்போது கார் ஓட்டத் தெரிந்தவரை அருகில் வைத்துக் கொள்ள வேண்டும்; Learners Licence வைத்திருக்க வேண்டும்; L போர்டை காரின் முன், பின் பக்கங்களில் தொங்க விட வேண்டும். இந்த L போர்டைப் பார்த்து மற்ற வாகனங்களில் செல்வோர் எச்சரிக்கையாகச் செல்வார்கள்.



அன்புள்ள ஜக்கு...



இங்கு 5 கேள்விகளும் 6 படங்கள் மற்றும் பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. சரியான விடைகளைத் தேடிக் கண்டுபிடித்து எழுதுங்கள். பெற்றோர் கையொப்பம் அவசியம். முகவரி கூப்பனை ஒட்டி உங்கள் முழு முகவரியைத் தெளிவாக எழுதி அனுப்புங்கள். மொத்தப் பரிசு ரூ.1000/- சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசித் தேதி : 20.04.2005

I. பதில் என்ன?

1. பாண்டா கரடி எங்கு காணப்படுகிறது?
2. பாண்டாவை சின்னமாகக் கொண்ட நிறுவனம்?
3. பாண்டாவின் உணவு?
4. பாண்டா சாதுவா?
5. பாண்டா அழிந்து வரக் கூடிய பிராணிகளின் பட்டியலில் உள்ளதா?



ரூபாய் பரிசுப் போட்டி

இலைகளின் பெயர்களைச் சரியாக எழுதுங்கள்.



மிளகு
தக்காளி
ரோஜா
திராட்சை
பப்பாளி
பூசணி

ஆசிரியர்,
கோகுலம்
47-NP, ஜவாஹர்லால்
நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032



ஓவியப் போட்டி

வெயில் நேரத்தில் பனிப் பிரதேசத்தை நினைக்கும்போதே ஜில்லென்று இருக்கிறதில்லையா? இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு : பனிப் பிரதேசம். பனிப்பிரதேசத்தில் ஹஸ்கி நாய் வண்டி, க்ளூ வீடு, மனிதன், சீல், பனிக்கரடி, பனிமான் இப்படி எதை



வேண்டுமானாலும் உங்கள் கற்பனையைத் தீட்டி வரைந்து அனுப்புங்கள். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசித் தேதி : 8.4.2005

உயிரைக் காத்த அன்பு!

இரண்டு போர் வீரர்கள் விரைந்து ஓடக் கூடிய அழகான குதிரைகளை வளர்த்து வந்தார்கள். அவர்களில் ஒரு வீரன் தன் குதிரையிடம் அதிக அன்பு கொண்டவனாய், அதைக் குளிக்கச் செய்தும் சரியான நேரத்திற்கு உணவளித்தும் பரிவோடு தடவிக் கொடுத்தும் அன்பாய்ப் பாதுகாத்து வந்தான்.

அவனுடைய நண்பனோ, தன் குதிரையை எப்போதும் அடித்து ஒடுக்கிக் கடுமையாக நடத்தி வந்தான். இரை கொடுப்பதற்காக அவன் தன் குதிரையின் அருகில் வந்தால்கூட குதிரை பயத்தில் மிரண்டு போய் நிற்கும்.

எதிர்பாராமல் ஒரு நாள் போர் முரசு ஒலிக்க, போர் வீரர்கள் அனைவரும் போர்க்களம் சென்றனர். வீரர்கள் இருவரும் தங்கள் குதிரையின் மேல் அமர்ந்து போரிட்டுக்

கொண்டிருந்தார்கள். அது சமயம் எதிரிகளின் தாக்கு



தலில் படுகாயம் அடைந்து தரையிலே விழுந்து விட்டார்கள். தன்னிடம் அன்பும் பாசமும் காட்டிப் பிரியமாக நடத்திய தன் எஜமானன் காயம்பட்டு எழுந்திருக்க முடியாமல் இருப்பதைப் பார்த்த குதிரை, எஜமானனின் இடுப்பு பெல்டைப் பிடித்து இழுத்துக் கொண்டு பாதுகாப்பாய்த் தன் படை முகாமுக்குள் கொண்டு வந்து சேர்த்தது.

மற்றொரு வீரன் வலிதாங்காமல் தள்ளாடியபடியே எழுந்து தன் குதிரைக்கு அருகே சென்றபோது, வழக்கம் போல் இவன் தன்னை உதைத்து துன்புறுத்தத்தான்

மா. அழகுராஜன்

வருகிறான் என்று நினைத்து பயத்தில் அவனை உதைத்துத் தள்ளிவிட்டு விரைந்து ஓடிப் போனது. உதைபட்ட வீரனோ மயக்கமடைந்து கீழே சரிந்தான்.

காட்டில் தேர்தல்!



காட்டில் தேர்தல்
நடக்கிறதாம்!
கட்சிகள் எல்லாம்
மும்முரமாம்!
ஓட்டுப் போட எந்திரமாம்!
ஒரு மணிக் குள்ளே
முடிவுகளாம்!

யானை தேர்தலில் நிற்கிறதாம்!
ஆடுகள், மாடுகள்
ஆதரவாம்!
மானை, முயலைத் துணை
சேர்த்து
மாபெரும் கூட்டணி
அமைக்கிறதாம்!

சிங்கத் தலைமைக் கட்சியிலே
சிறுத்தைகள், புலிகள்
ஓரணியாம்!
எங்கும் மேடைப் பேச்சுகளாம்!
எல்லா மிருகமும் பரபரப்பாம்!



கொம்புச் சின்னம்! வால்
சின்னம்!
கோரைப் பல்லும் ஒரு
சின்னம்!
வம்புச் சண்டை வலுக்கிறதாம்!
வண்ணக் கொடிகள்
கிழிகிறதாம்!

ஒட்டகச் சிவிங்கி எளிதாக
உயர்ந்த கட்-அவுட்
பார்க்கிறதாம்!
கட்டைக் குரலில் பிரசாரம்
கழுதை கத்திச் செய்கிறதாம்!

காட்டில் நடக்கும் தேர்தலையே
காணக் குழந்தைகள்
வாருங்கள்!
'ஓட்டிங்' முடிவு தெரிந்தவுடன்
ஒரு மணிக் குள்ளே
திரும்பிடலாம்!

நெ. சண்முகவேலாயுதம்

'கிண்டர் கார்டன்' பள்ளி என்பது பாலர்களுக்கான பள்ளி. பொம்மைகள், விளை யாட்டுகள், கைவினைப் பொருட்கள் போன்றவை மூல மாக ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு கல்வி புகட்டும் பள்ளி.

1782 - 1852களில் வாழ்ந்த 'ஃபிரைடு ரிச் ஃப்ரோ பெல்' ஒரு சிறந்த கல்வியாளர். சுவிஸ் நாட்டின் கல்விச் சீர் பணிபுரிந்த ஃப்ரோபெல் 1816-ல் ஜெர்மனியில் தனது சொந்தப் பள்ளி ஒன்றைத் தோற்றுவித்தார். குழந்தை களுக்குக் கல்வியை அவர் களது போக்கிலேயே வேடிக்கை, விளையாட்டுகள் மூலம் கற்பித்து அவர்கள் அறிவை வளர்க்க விரும் பினார். அவர்கள் மகிழக் கூடிய வகையில் ரம்மியமான சூழ் நிலையில் விருப்பத்திற்கேற்ற

கிண்டர் கார்டன் பள்ளி





திருத்தவாதி 'ஜோஹன் பெஸ்டலோஸி' என்பவருடன் நான்கு ஆண்டுகள்



பாடல்கள், நடனங்கள் மூலம் கல்வி புகட்ட விரும்பினார். அவர்களைச் சுதந்திரமாக, உற்சாகத்துடன் உலவ விட விரும்பினார். படைக்கும் திறனை அவர்களிடம் வளர்க்க ஆசைப்பட்டார். இந்த வகை

யான ஃப்ரோபெல்லின் கற்பிக்கும் முறை 1830-ம் ஆண்டு அறிமுகமானது. மூன்றிலிருந்து ஏழு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குச் சித்திரம் வரைவது மூலமும் பொம்மைகள், விளையாட்டுகள் மற்றும் இதர கைவினைப் பொருட்கள் மூலமும் கணிதம், வரலாறு போன்றவற்றைக் கற்பிக்க ஃப்ரோபெல்லின் கல்வி முறை உதவியது.

நர்சரி குழந்தைகளுக்காக துருங்கியாவிலுள்ள 'பிளாங் கென் பர்க்'கில் 1837-ல் ஒரு பள்ளியை அமைத்தார். இப்பள்ளிக்கு 'கின்டர் கார்டன்' எனப் பெயர் சூட்டினார்.

ஃப்ரோபெல் இப்பள்ளியைக் குழந்தைகளின் தோட்டமாகவும், இங்கே மலர்ந்து பூத்துக் குலுங்கும் மலர்களாகக் குழந்தைகளையும் பாவித்தார். 'கின்டர் கார்டன்' - பாலர் பயிற்சிப் பள்ளியை 1849-ம் ஆண்டு ஆரம்பித்தார். இவருடைய கல்வி முறையும், நோக்கமும் மிகுந்த புகழைப் பெற்றது.

'கின்டர் கார்டன்' கல்வி முறை அமெரிக்க ஐக்கிய நாட்டில் 1840-ம் ஆண்டு அறிமுகமானது. மக்களிடையே பத்தொன்பதாம் நூற்றாண்டில் தான் பிரசித்திப் பெற்றது.





1883-ம் ஆண்டுக்குள் செயின்ட் லூயிஸ் நகரின் ஒவ்வொரு பள்ளியிலும் பாலர் பள்ளி துவங்கப்பட்டது. ஆரம்பத்தில் ஏழை, எளியோருக்காகத்தான் இப்பள்ளி துவங்கப்பட்டது. நாளடைவில் செல்வந்தர்களும்கூட தங்கள் குழந்தைகளை இப்பள்ளியில் சேர்த்து, படிக்க வைக்கத் துவங்கினர். நம் நாட்டிலும் கின்டர் கார்டன் பள்ளிகள் வரவேற்பு பெற்றுள்ளன.

- எஸ். ராஜகோபால்,
திருச்சி

புதையல் தீவு

12

பா.ராகவன்

பாலு, டில்லி, குடுமிநாதன் மூவரையும் அவர்கள் கயிற்றினால் பிணைத்து, படகின் ஒரு மூலையில் கோணி மூட்டை போல் உருட்டி விட்டிருந்தார்கள்.

"ஒண்ணும் பிரச்னை இருக்காதுன்னுதான் நினைக்கறேன். எப்படியும் நாம தப்பிச்சிடுவோம்!" என்றான் டில்லி.

அவன் சொல்லி முடித்த நேரம் படகைச் செலுத்திக் கொண்டிருந்த குண்டனின் நடவடிக்கையில் ஒரு பரபரப்பு தெரிந்தது. குண்டர்கள் தபதபவென்று எஞ்சின் அறையை நோக்கிப் போவதை அவர்கள் பார்த்தார்கள்.

பாலு, சைகை மூலம் என்ன நடக்கிறது என்று கேட்டான்.

"கருவி வேலை செஞ்சிடுச்சின்னு நினைக்கறேன்" என்றான் டில்லி.

"என்னது?" என்றான் குடுமி.

"நாம படகில் ஏறுமுன் மரத்தடிக்கு மறைவா போய் ஒரு நிமிஷம் தியானம் செஞ்சிட்டு வந்தேன் நினைவிருக்கா? எங்க தலைவரோட மொபைல் போன்! எதுக்கும் இருக்கட்டும்னு எடுத்துக்கிட்டு வந்துட்டேன். ஆனா போன் அடிச்சி யாரையும் உதவிக்கு கூப்பிடும் நிலையில நாம இல்லை. அதனால அந்த மொபைல்ல இருந்த அத்தனை நம்பர்களுக்கும் எஸ்.எம்.எஸ். குடுத்துட்டேன். ஒரே ஒரு மெசேஜ்! பன்றித்தீவில் ஆபத்தில் இருக்கிறோம். காப்பாற்றுங்கள். அவ்வளவுதான். வந்துட்டாங்கன்னு நினைக்கிறேன்!" என்றான் டில்லி.

அவர்கள் போய்க் கொண்டிருந்த படகிலிருந்து சுமார் முப்பதடி தூரத்தில் சுற்றிலும் ஏராளமான மீன் பிடிப் படகுகளும் விசைப்படகுகளும் கட்டுமரங்களும் அணி வகுத்திருந்தன!

டில்லி, "காப்பாத்துங்க, காப்பாத்துங்க" என்று உரக்கக் குரல் கொடுக்க ஆரம்பித்தான்.

அதற்குள் தப்பிக்க ஏதாவது வழியுண்டா என்று குண்டர்கள் பரபரப்பாக பேசிக் கொண்டிருக்க, மீனவப் படகுகள் அந்த இயந்



திரப் படகை நெருங்கி, ஏழெட்டு பேர் உருட்டுக் கட்டையுடன் முதலில் அந்தப் படகுக்குள் ஏறிக் குதித்தார்கள்.

இரண்டே நிமிடங்கள். படகில் இருந்த அத்தனை குண்டர்களும் அதே கயிற்றால் கட்டப்பட்டு ஒரு மூலையில் உருட்டப்பட, பாலு, டில்லி, குடுமி மூவரும் விடுவிக்கப் பட்டு, அந்தப் படகிலிருந்து பத்திரமாக இறக்கப்பட்டு, பாதுகாப்பாகக் கடற்படைப் படகில் ஏற்றப்பட்டார்கள்.

பாலுவுக்கு ஆசுவாசம் செய்து கொள்ளக் கூட அவகாசம் இல்லை. கடற்படை அதிகாரிகளைப் பார்த்ததுமே ஓடிப் போய் விவரங்களைச் சொல்ல ஆரம்பித்து விட்டான்.

''இது ஒரு சமூக விரோதக் கூட்டம். புதையல்னு இவங்க குறிப்பிட்டது என்ன தெரியுமா? பெட்ரோல், டீசல் போன்ற எரி பொருள்கள்! நம்ம நாட்டுலேருந்து திருட்டுத்தனமா அதைக் கடத்தி எடுத்துக்கிட்டு வந்து இந்தப் பன்றித் தீவுல புதர்களுக்கு இடையில் பதுக்கி வெச்சிக்கிறாங்க. மாதம் ஒருமுறை அதை இங்கேருந்து ஸ்டீம் போட்ல ஏத்தி வெளி நாட்டுக்கு எடுத்துக்கிட்டுப் போறாங்க'' என்றான் பாலு.


''ஓ, மை காட்!'' என்ற கடற்படை அதிகாரி, ''எனக்குப் புரிஞ்சிடுச்சி. கொஞ்ச நாளாவே எங்களுக்கு இங்கேருந்து பெட்ரோல் கடத்தப்படுதோன்னு சந்தேகம். சரியா பொறி வெச்சிப் பிடிக்கணும்னு நினைச்சிக்கிட்டிருந்தோம். பொடிப்பசங்க நீங்க எப்படியோ இதைக் கண்டுபிடிச்சிட்டிங்களே!'' என்றபடி பாலுவைத் தட்டிக் கொடுத்தார்.

பாலு, டில்லி, குடுமி, அவர்களை மீட்கப் போன மீனவர்களும் கடற்படை அதிகாரிகளும் பன்றித்தீவில் வேலைகளை முடித்துவிட்டு, கைது செய்த குண்டர்களுடன் கரைக்கு மீள்வதற்குள் பொழுது விடிந்துவிட்டது. அதற்குள் அதிகாரிகள் கரையில் இருப்போருக்குத் தகவல் தெரிவித்து விட்டிருந்ததால், கடற்கரையெங்கும் மக்கள் கூட்டம் கூட்டமாக கூடி நின்றார்கள். க்ரூப் ஸ்டடி என்று கதை விட்டுவிட்டு இப்படியொரு காரியத்துக்குத் தங்கள் மகன்கள் போயிருக்கிறார்கள் என்பதை

யார் அந்தப் பிரபலம்?



சிறந்த எழுத்தாளர். சுயசரிதையின் தலைப்பு 'என் வாழ்க்கைப் போராட்டம்' (The struggle of my life)



"ஏண்டா, உன்னை ஒரு வீடும் மனிதனும் படம் வரையச் சொன்னா... நீ வெறும் வீட்டை மாத்திரம் வரைஞ்சிருக்கியே... மனுஷன் எங்கே?"

"மனுஷன் அந்த வீட்டுக் குள்ளே இருக்கான் சார்!"

- அரிச்சந்திரன்

இன்னமும் நம்பமுடியாத பாலு மற்றும் குடுமியின் பெற்றோரும் அந்தக் கூட்டத்தில் இருந் தார்கள்.

தூரத்தில் பாலு வருகிற படகு தெரிந்ததுமே மக்கள் மத்தியில் ஆரவாரம்.

படகுகள் கரையைத் தொட்டதும் இளைஞர்கள் சிலர் தண்ணீரில் ஓடி, படகிலிருந்த பாலுவையும் குடுமியையும் டில்லியையும் அப்படியே அலேக்காகத் தலையில் தூக்கிக் கொண்டு ஓடினார்கள்.

ஆளாளுக்குப் பேசிக் கொண்டே இருந்தார்கள். கரை இறங்கியதும் டில்லி நேரே தங்கள் மீனவர் சங்கத் தலைவரிடம் போய் அவரது மொபைல் போனைக் கொடுத்து விட்டு, "மன்னிச்சிக்கங்க சார். உங்களைக் கேக்காம இதை எடுத்துக்கிட்டுப் போயிட்டேன். நம்ம தலைவர்தானேன்னு ஒரு உரிமைல செஞ்சிட்டேன். ஆனா இது இல்லாட்டி இந் நேரம் நாங்க மூணுபேரும் நடுக்கடல்ல ஜலசமாதி ஆகி யிருப்போம்" என்றான்.

"அட நீ ஒண்ணு! உங்க மூணு பேருக்குமே நானே மொபைல் போன் வாங்கிப் பரி சளிக்கப் போறேன்" என்றார் தலைவர்.

அத்தனை பேரும் சந்தோ ஷத்தில் மிதந்து கொண்டிருந்த போது, அவர்களது சந்தோஷத் தைப் பல மடங்காக்குவது போலக் கடற்படை அதிகாரி ஒரு விஷயத்தைச் சொன்னார்.

"ஒரு விஷயம் தெரியுமா? நம்ம ஜனாதிபதி இன்னிக்கு நம்ம ஊருக்கு வரார். பக்கத்து ஊர்ல ஒரு பள்ளிக்கூடத்தைத் திறந்து வைக்க வர்றவர், அப்படியே அவரோட சொந்த ஊரான இங்கும் வரப்போறதா அவசரச் செய்தி வந்திருக்கு. அதனால நம்ம சூப்பர் ஹீரோக் கள் மூணு பேருக்கும் ஜனாதி பதியை வைத்தே ஒரு மினி பாராட்டு விழா நடத்தக் கடற்படை முடிவு செய்திருக்கு" என்றார்.

ஆரவாரம் விண்ணைப் பிளந்தது.

அன்று மாலை ஊரே விழாக்கோலம் பூண்டிருந்தது. அலையலையாக மக்கள் குவிந் திருக்க, சரியாக ஐந்து மணிக்கு

1,000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

பிப்ரவரி இதழில் அறிவித்த போட்டியில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். ஆனால் சிலர் மட்டுமே சரியான விடைகளை அளித்திருந்தனர். சரியான விடையளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



சரியான விடை :

I. 1.காது எலும்பு 2.தொடை எலும்பு 3. வளையாது 4. 206 எலும்புகள் 5. உள்ளங்கை மற்றும் கால் பாதம்

II. 1. மீன் கொத்தி 2. பஞ்சு விட்டான் 3. மலைமொங்கன் 4. ஹம்மிங்பேர்ட் 5. கரண்டி வாயன் 6. பாம்புத்தாரா

பரிசு யாருக்கு?

1. வி.ஜெயஸ்ரீ, பி.எஸ். மேல்நிலைப் பள்ளி, சென்னை
2. எம்.ஓவியா, ஒன்பதாம் வகுப்பு, எஸ்.கே. அ.மே.நி.பள்ளி, தேத்தாக்குடி, நாகை மாவட்டம்
3. வி. மனோரஞ்சிதா, ஐந்தாம் வகுப்பு, சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி
4. கே.வி. திவாகர், ஏழாம் வகுப்பு, அ.உ.நி.பள்ளி, செவிந்திபட்டி, நாமக்கல்
5. எம்.சச்சிதானந்தம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

ஜனாதிபதியின் வாகனம் வந்து சேர்ந்தது.

பாலு, டில்லி, குடுமிநாதன் மூன்று பேரையும் கடற்படை அதிகாரிகள் அழைத்து ஜனாதிபதிக்கு அறிமுகப்படுத்தினர்.

ஜனாதிபதி அவர்களை அன்புடன் பார்த்தார். அருகே அழைத்து ஆரத் தழுவிக் கொண்டார். விருது அளித்தார்.

விழா முடிந்து காரில் ஏறு முன் ஜனாதிபதி பாலுவை அழைத்தார். ''ஒரே ஒரு கேள்வி!''

''சொல்லுங்க சார்!''

''உன் நண்பன் பத்மநாபனுக்குக் குடுமியே இல்லையே? அப்புறம் ஏன் அவனைக் குடுமின்னு கூப்பிடறீங்க?''

பாலுவுக்குச் சிரிப்பு பொத்துக்கொண்டு வந்துவிட்டது.

''ஓ, அதுவா! பத்மநாபனுக்கு நீளமா முடி வளர்த்து ஸ்டைலா காத்துல பறக்க விடணும்னு ஆசை சார். ஆனா அவங்க அப்பா மாதம் ஒருமுறை நல்லா ஒட்ட அடிச்சிடுவார். இயல்புல இல்லாத குடுமியை, பேர்லயாவது வெக்கலாமேன்னுதான் அப்படியொரு பட்டப் பெயர் வெச்சோம்'' என்றான்.


ஜனாதிபதி குழந்தைபோல் சிரித்தார். கூடியிருந்த மக்கள் அவரது சிரிப்பில் கலந்து கொண்டார்கள். அந்தக் கடலோர கிராமத்துக் குழந்தைகள் அத்தனை பேரும் பாலுவையும் குடுமியையும் டில்லியையும் பெருமை பொங்கப் பார்த்தார்கள்.

(முற்றும்)

ஆபத்து!

கருத்து : வி.ஆர் கிருத்திகா, திருச்சி

படம் : பிள்ளை



மறக்க முடியவில்லை...!

எலிப் பொறிக்குள் பஸ்!

சமீபத்தில் எங்கள் வீட்டில் ஓர் எலி, தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தது. பஸ் ஸ்டாண்டிற்கு வரும் வழியில் ஒரு கடையில் நிறைய எலிப் பொறிகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பதைக் கண்டோம். எலியின் அட்டகாசம் பொறுக்க முடியாததால் அதை வாங்க முடிவு செய்தோம். கடையில் கூட்டம் அதிகமாக இருந்ததால், எங்கள் தந்தை கடைக்காரரிடம் சென்று, ''சீக்கிரம் ஒரு எலிப்பொறி குடுங்க. சங்கரன்



கோவில் பஸ்ஸைப் பிடிக்கணும்!'' என்றார். உடனே கடைக்காரர், ''பஸ்ஸைப் பிடிக்கிற அளவுக்கு பெரிய எலிப் பொறி நம்மகிட்ட கிடையாதே!'' என்று கூறினாரே பார்க்கலாம்!

- எம். வினோத், சங்கரன்கோவில்



ஆணாக...

பள்ளி விழாவிற்குப் பெற்றோருடன் சென்றிருந்தேன். விழாவின் இறுதி நிகழ்ச்சியாகப் பாஞ்சாலி சபதம் நாடகம் நடிக்கப் பெற்றது. நாடகத்தில் நடித்தவர் அனைவரும் மாணவர்கள். நாடகத்தைத் தயாரித்து, இயக்கும் ஆசிரியர், ''நான் சைகை காட்டிய பிறகே, நீ பாஞ்சாலியின் புடைவையைப் பற்றி இழுக்க வேண்டும்'' என்று துச்சாதனன் வேடம் தரித்த மாணவனிடம் சொல்லியிருந்தார்.

ஆனால் கிருஷ்ணன் புடைவையை அனுப்பத் தாமதம் ஆனதால், தன் ஒரே புடைவை அவிழ்க்கப்பட்டு, அரை டிராயரோடு நின்றாள் பாஞ்சாலி. எல்லோரும் கைதட்டிச் சிரித்தனர். ஆனால் டிராயரோடு நின்ற மாணவன், சாமர்த்தியமாக, ''கிருஷ்ணா! என் மானத்தைக் காப்பதற்கு, என்னை ஆணாக

மாற்றி விட்டாயே! உனக்கு நன்றி!'' என்று சொந்தமாக வசனம் பேசினான். அவையோர் பலமாக ஆரவாரம் செய்தனர்!

- டி. யாழினி,
திருவண்ணாமலை

வெடிகுண்டு

நான் மாணவியர் தலைவி வராத காரணத்தினால் அப்பொறுப்பை ஏற்று வழிபாடு நடத்திக் கொண்டிருந்தபோது ஓர் ஆசிரியர் பள்ளியில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளது என்றார். ஒரு பையிலிருந்து 'பிம்', 'பிம்' என்று ஓசை வருவது கேட்டது. ஆசிரியர் ஒருவர் தைரியமாக பையைக் குச்சியால் நகர்த்தினார். கடைசியில், ஓசை வரும் பையை எடுத்துப் பார்த்தால் அதில் ஒரு எலெக்ட்ரானிக் எக்யுப்மென்ட் வைக்கப்பட்டு இருந்தது. அதன் ஒலியை வைத்துத்தான் வெடிகுண்டு என்று நினைத்து விட்டார்கள். ஆசிரியர் அன்று முதல் யாரும் மின் அணுக் கருவியைக் கொண்டு வரக் கூடாது என்றார். இந் நிகழ்ச்சியை என்னால் மறக்க இயலாது.



- ஆர்.கோமதி,
பதினோராம் வகுப்பு,
அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளி, நந்திவரம்

சாக்லேட்

பிறந்தநாள் என்பதால் புது ஆடை அணிந்து சென்றாள் அம்மா டீச்சர் அவளிடம் ''ஏன் யூனிபார்ம் அணியவில்லை?''



என்று கேட்டிருக்கிறார். பர்த்டே என்றால் வழக்கம் போல டீச்சரிடம் பிள்ளைகள் சாக்லேட் வழங்குவார்கள் என்பதால் என்ன சொல்வது என்று குழம்பிய அமலா சட்டென்று, ''டீச்சர், இன்று எனக்கு சாக்லேட் இல்லாத பர்த்டே'' என்றாள் அடி வாங்காமல் தப்பிக்க. டீச்சர் சிரித்தபடியே தன் கைப்பையிலிருந்த ஒரு சாக்லேட்டை எடுத்து அமலாவிடம் கொடுத்தபடியே, ''இந்தா, உனக்கு சாக்லேட்டோடயே பர்த்டே இருக்கட்டும்'' என்றார். அமலா முகத்தில் அப்படி ஒரு மகிழ்ச்சி.

- எஸ். டேனியல்
லியோ பிரபு,
மதுரை

மறக்க முடியவில்லை...


ரேவதி ஆன்ட்டி டைம்ஸ்

இரண்டே நிமிடங்களில் கண்டுபிடியுங்கள்!

இந்த மாதம் உங்கள் அறிவுத் திறனைச் சோதிக்க ஜாலி புதிர்கள்!



1. இதில் A உயரம் அதிகமா, B உயரம் அதிகமா?




2. இந்தப் படத்தில் இருப்பது என்ன?


3. இதில் எத்தனை கோடுகள் உள்ளன?

4. ஒரே கோடா? அல்லது பல வட்டங்களா?



5. பறவைகள் எந்தப் பக்கம் பறக்கின்றன?





6. கீழே உள்ள படத்தில் என்ன வித்தியாசங்களை உணர்கிறீர்கள்?



சென்ற மாதம் ‘ழ’ பயிற்சி செய்தீர்களா? இதையும் பயிற்சி செய்யுங்கள்.

1. மலையிலிருந்து மர உரல் உருளுது புரளுது.

2. எங்கள் சித்தி தெச்ச சட்டை பச்சை சட்டை






விடைகள் :

1. இரண்டும் ஒரே உயரம்
2. வண்ணத்துப் பூச்சியின் இறக்கை டிசைன்.
3. நான்கு கோடுகள்
4. பல வட்டங்கள்
5. வெள்ளைப் பறவை வலபுறமும் கறுப்பு பறவை இடப் புறமும் பறக்கின்றன.
6. ஆணி சுத்தியல், மூன்று பிளேடுகள், கப்பின் உட்புறம் பிடி.

ரேடியோவில் குருவிக்கூடு!




* என்.எஸ்.கிருஷ்ணன்

யாருக்குச் சொந்தம்?

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனிடம், அவரது நண்பர் ஒருநாள், ''மூட நம்பிக்கைகள், நம் நாட்டைப் போலவே, அமெரிக்காவிலும் இருக்கிறதாம். ஆச்சரியமாக இருக்கிறதே!'' என்று சொன்னார். கலைவாணர் உடனே சிரித்துக்கொண்டே ''முட்டாள்தனம், மூடநம்பிக்கை எல்லாம் உனக்கு மட்டுமே சொந்தம் என்று நினைக்காதே. அவை, இந்த உலகம் முழுவதுக்கும் சொந்தமானவை'' என்றார்.

- ஆர். ராஜலட்சுமி,
காந்தி கிராமம்

* ட்ரூமன்



முன்னேற முடியாது...

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரூமன் இருந்தபோது வெள்ளை மாளிகையில் விருந்தொன்று நடந்தது. அதில் கலந்து கொண்டவர்கள் எல்லோரும் மகிழ்ச்சியாக இருந்தார்கள். ஆனால் ட்ரூமன் தன் நண்பர்களிடம் ''இந்த உத்தியோகம் எனக்குப் பிடிக்கவில்லை'' என்றார். எல்லோருக்கும் வியப்பு. ''அமெரிக்க ஜனாதிபதி பதவி ஆயிற்றே!'' என்று கேட்டார் நண்பர் ஒருவர். அதற்கு ட்ரூமன் ''இந்த உத்தியோகத்திலே இருந்து என்ன பயன்? பதவி உயர்வு பெற்று முன்னேறக் கூட வழி இல்லையே!'' என்றார்!

-கே.என். மகாலிங்கம்,
பாண்டிச்சேரி


குப்பைக் கூடை எதற்கு?

பிரபல விஞ்ஞானியான ஐன்ஸ்டீன் ஒருநாள் பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்திலிருந்து தமது அலுவலகத்துக்கு வந்தார். தன் உதவியாளரை அழைத்து, தனக்கு

ஒரு மேசை, நாற்காலி, எழுத காகிதம், பென்சில் இவற்றோடு ஒரு பெரிய குப்பைக் கூடையையும் வாங்கி வருமாறு கூறினார். அதற்கு அந்த உதவியாளர், ''மற்ற பொருட்கள் எல்லாம் சரி; குப்பைக் கூடை எதற்கு?'' என்று கேட்டார். ''நான் செய்யும் தவறுகளை மறைக்கத்தான்'' என்று பதில் சொன்னார் ஐன்ஸ்டீன்.


- ஆர். அம்பிகா, மதுரை

* ஐன்ஸ்டீன்



கருணை!

பங்களாதேஷ் விடுதலைப் போர் உச்சக்கட்டத்தில் இருக்கும் போது காமராஜர் செய்தி கேட்பதற்காகத் தன்னிடம் இருந்த ரேடியோவைத் தேடிக் கொண்டிருந்தார். ரேடியோ கிடைத்தது. ஆனால் அதில் ஒரு குருவி, கூடு கட்டியிருந்தது. ''இது என்னப்பா அதிசயம்! இதற்குள் குருவி கூடு கட்டியிருக்கிறதே!'' என்று வியந்தார். ''இதை ரிப்பேருக்குக் கொடுத்து விடுவோம்'' என்று சொன்ன உதவியாளரிடம், ''வேண்டாம், வேண்டாம். இப்போது ஒண்ணும் அவசரமில்லை, அந்த ரேடியோவை வெளியே எடுத்து வைக்கச் சொல். வெளியே வைத்து



* காமராஜர்

விட்டாலே, குருவி கூட்டைக் காலி செய்துவிட்டுச் சென்று விடும். அப்புறம் எடுத்துச் செல்லலாம்'' என்றார்.


- ப. கந்தசாமி,
திருச்செங்கோடு

கொடை வள்ளல்!

ஒருமுறை காந்திஜி நிதி கேட்டதும் திருச்சி ஜமால் முகமது உடனே செக்கில் கையெழுத்து மட்டும் போட்டுவிட்டு, வேண்டிய தொகையைப் பூர்த்தி செய்து கொள்ளும்படி கூறினார். இதனைக் காந்திஜி ''பிர்லாகூட இப்படி பிளைன் செக் தந்ததில்லை'' என்று புகழ்ந்து கூறி, அந்த 'செக்'கில் ஒரு லட்சம் ரூபாய் எழுதினார்!

- அகிலா தேவி
பத்தாம் வகுப்பு,
பியர்ல் அறக்கட்டளை மையம்,
தர்மராஜபுரம்.

* காந்திஜி



வீட்டிலும் ஆபத்து; வெளியிலும் ஆபத்து!

ஓர் அந்தணர் பிச்சை எடுத்து சாப்பிட்டு வந்தார்.

கிடைத்ததில் மிச்சம் பிடித்துக் கொஞ்சம் கொஞ்சமாக ஆயிரம் ரூபாய் சேர்த்து விட்டார். பாதுகாப்பதற்காக, அதை அந்த ஊரில் இருந்த ஒருவரிடம் கொடுத்துவிட்டு, மீண்டும் பிச்சை எடுக்கச் சென்றுவிட்டார்.

பல மாதங்களுக்குப் பிறகு, ஒருநாள் ஊர் திரும்பி வந்த அவர், அந்த நபரிடம், ''என் பணத்தைத் திருப்பிக் கொடுங்கள்'' என்று வேண்டினார்.

ஆனால், அந்த நபரால், அதைத் திருப்பித் தர முடியவில்லை.

எனவே, அவர் ''பணத்துக்குப் பதிலாக என் மகளை வேண்டுமானால் திருமணம் செய்து அழைத்துச் செல்லுங்கள்...'' என்று கூறி விட்டார்.

வேறு வழியின்றி, அந்தணரும் அவ்வாறே அவளை வீட்டுக்கு அழைத்து வந்து விட்டார். ஆனால், அவள் ஒரு முழுச் சோம்பேறி.

ஒருநாள் அந்தணர், வீட்டுக்குச் சாப்பிட வந்தபோது, வீட்டில் உணவு ஏதும் இல்லை. அவர் மனைவி சமைக்கவே இல்லை.

காரணம் கேட்டபோது, அவள், ''உன் வீட்டு வேலையை எல்லாம் செய்ய என்னால் ஆகாது. வேலைக்கு



என்று ஒருத்தியை ஏற்பாடு செய்'' என்றாள்.

அதற்கு அவர், ''பகவதி! என்னிடம் பணம் ஏது? வேலைக்காரிக்கு நான் எப்படி சம்பளம் கொடுப்பேன்?'' என்றார்.

உடனே, அவள், ''என்னைக் கேட்டால்...? அதற்கும் சேர்த்துப் பிச்சை எடுங்கள்...'' என்று கோபப்பட்டாள்.

அந்தணர், ''நல்லது! அப்படியானால் வழிப் பயணத்தின்போது சாப்பிட, ஏதாவது உணவைக் கையில் கட்டிக் கொடு'' என்றார்.

அவளும், ஒரு துணிப் பையில் கொஞ்சம் சத்து மாவைப் போட்டு அதன் வாயைக் கட்டிக் கொடுத்து அனுப்பினாள். அதைத் தோளில் போட்டு கொண்டு, அந்தணர் ஊர் ஊராகச் சென்று பிச்சை எடுத்தார்.

கையில் எழுநூறு ரூபாய் சேர்ந்ததும், 'வேலைக்காரி சம்பளத்துக்கு இத் தொகை போதாதா...?' என்று நினைத்து ஊரை நோக்கி நடந்தார்.



வழியில் ஒரு தூய நீரோடை.

அந்தணர் அங்கு ஒரு மரத்தின் நிழலில் ஓய்வு எடுத்துக் கொண்டார். பையைத் திறந்து, அதில் இருந்த மாவில் கொஞ்சம் எடுத்துப் புசித்தார்.

எவரும் எடுத்துச் சென்று விடக் கூடாது என்பதற்காகத் தனது சத்துமாவுப் பையை அந்த மரத்தின் பொந்தில் வைத்துவிட்டு எழுந்து போய்த் தண்ணீர் அருந்தி விட்டு வந்தார்.

பிறகு, பொந்திலிருந்து பையை வெளியில் எடுத்து, அதன் வாயைக் கயிற்றால் கட்டி, எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு, தனது கிராமம் நோக்கி நடந்தார்.

அப்போது, சாலை ஓர மரத்

ஜானகி மணாளன்

திலிருந்து பேச்சுக்குரல் கேட்டது : "வழியில் நீ எங்கும் தங்கினால், இன்று உனக்கு மரணம்; வீட்டை அடைந்து விட்டால் உன் மனைவி இறந்து போவாள்..." என்றது குரல்.

அதைக் கேட்டு அந்தணர் மரண பயத்தில் நடுநடுங்கிப் போனார். பீதியோடு வழி நடந்து வாரணாசியை அடைந்தார்.

அது ஒரு பௌர்ணமி தினம். செனக குமாரர் என்ற துறவி மக்களுக்கு நல்லுபதேசம் செய்யும் நாள். அந்தக் கூட்டத்துக்கு மக்கள் போய்க் கொண்டிருந்தனர்.

கூட்டமாகப் பலர் செல்வதைப் பார்த்ததும் அந்தணரிடம் ஆவல்! "எல்லோரும் எங்கே போய்க் கொண்டு இருக்கிறீர்கள்?" என்று வினவினார்.

"உங்களுக்குத் தெரியாதா...? செனக குமாரர் இன்று தர்மம் - அதர்மம் இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் பற்றி எடுத்துச் சொல்லப் போகிறார்..." என்றான் ஒருவன்.

அந்தணர், 'அந்த அடிமரம் கூறிய செய்தியின் விளக்கத்தை, நாம் ஏன் இந்த ஞானியிடம் கூறி, 'அதைத் தவிர்க்க என்ன பரிகாரம் செய்யலாம் என்று யோசனை கேட்கக் கூடாது...?' என்று நினைத்து, அவரும் அந்தக் கூட்டத்தினருடன் சேர்ந்து கொண்டார்.

உபதேசம் நடந்த இடத்தில் நல்ல கூட்டம். தனது சத்துமாவுப் பையைத் தோளில் போட்டுக் கொண்டு, துறவியின் பேச்சைக் கேட்ட அந்தணருக்கு, அவரது உபதேசத்தில் மனம் ஈடுபடவில்லை. அவர் மனம், மரண பயத்தில் பதைபதைத்துக் கொண்டிருந்தது.

அந்தணரின் சோகத்தைக் கண்டுவிட்ட துறவி, "ஏன் அழுகிறாய்? விவரமாகச் சொல்..." என்று கேட்டார்.

மேலும் அழுத அந்தணர், வரும் வழியில் அந்த மரம் கூறிய செய்தி பற்றிக் கூறிவிட்டு, "நாங்கள் இருவருமே உயிர் தப்பிக்கத் தாங்கள்தான் வழி கூற வேண்டும்" என்று வேண்டினார்.

அந்தணரை உற்றுப் பார்த்த செனககுமாரர், அவர் தோளில் கிடந்த பைக்குள் ஏதோ பொருள் அசைவதைக் கண்டு

யார் அந்தப் பிரபலம்?



ஒரு நாட்டின் குடியரசுத் தலைவராக விளங்கியவர்.

விட்டார்.

உடனே அவர், ''சரி, அந்தணரே! ஊர் திரும்ப உத்தேசித்தது முதல் இந்த நிமிடம் வரையில் நடந்ததை அப்படியே கூறு...'' என்றார்.

அவரும் அவ்வாறே சொல்லி முடித்தார். பிறகு செனக குமாரர் அந்தணரிடம், ''மரப் பொந்தினுள் உன் பையை வைக்கும் போது, அதன் வாயைக் கட்டித் தானே வைத்தாய்...?''


''இல்லை ஐயா..'' என்ற அந்தணர், ''ஓடையில் தண்ணீர் குடித்துவிட்டு வந்து தான் பொந்திலிருந்து பையை எடுத்து அதன் வாயைக் கட்டித் தோளில் போட்டுக் கொண்டேன்...'' என்றார்.

செனக குமாரர், ''இப்போது நான் சொல்கிறபடிச் செய்... பையை எடுத்துக் கொண்டு, இந்தக் கூட்டத்தை விட்டு விலகித் தூரமாக நீ மட்டும் தனியாகச் செல்... அங்கு உன் பையின் வாயை எதிர்ப்புறமாகக் காட்டைப் பார்க்க வைத்துக் கொண்டு, அதன் வாய்க்கட்டை அவிழ்த்து விடு... அதன் பிறகு நடப்பதைப் பார்...'' என்றார்.

அந்தணரும் அவ்வாறே செய்தார். அப்போது அவரது பையிலிருந்து கருநாகம் நெளிந்து போவதை அனைவரும் கண்டனர்.

நடந்தவற்றைக் கண்டு அனைவரும் அதிசயித்தனர். அப்போது செனககுமாரர் சொன்னார். ''நடந்தது இதுதான். பையின் வாயைக் கட்டாமல், இவர் பையை மரப் பொந்தினுள் வைத்திருக்கிறார். அந்தக் கருநாகம் பைக்குள் போய்விட்டது. அது தெரியாமல், இவர் பையை எடுத்து, அதன் வாயைக் கட்டித் தோளில் போட்டுக் கொண்டு வந்து விட்டார். பையில் இருந்த கருநாகம், பை அவிழ்க்கப்பட்டதும் அருகில் உள்ளவரைக் கடிக்கத்தானே செய்யும்? எனவே தான், மரத்தின் மறைவில் இருந்தவாறு நடந்ததை எல்லாம் பார்த்துக் கொண்டு இருந்தவர் வழியில் இவரை எச்சரித்திருக்கிறார். அது புரியாமல் இவர் மரண பயம் கொண்டு பதறி விட்டார்... இனி ஆபத்து ஏதும் இல்லை..'' என்றார். அந்தணர் மகிழ்ந்தார்.

அந்தத் துறவி போதிசத்துவர்.



''எட்டாம் கிளாஸ் கணக்குப் புத்தகத்திடம் பத்தாம் கிளாஸ் கணக்குப் புத்தகம் என்ன சொல்லிச்சு?''

''உன்னைவிட எனக்கு பிராப்ளம் ஜாஸ்தின்னு!''

- ஆர். சாரதா,
திருவான்மியூர்





நோய் பரப்பும் ஈ

ஈ என்ற பெயரைக் கேட்டதும் நமக்கெல்லாம் அறுவறுப்பாகிவிடுகிறது. அதற்குக் காரணம் அசுத்தம் உள்ள இடங்களில் எல்லாம் ஈ வசிப்பது தான்! அழுக்கும் ஈயும் ஒன்றே.

பூச்சிகளில் இரண்டு சிறகுடையது ஈ மட்டுமே. மற்ற பூச்சிகளுக்கு நான்கு சிறகுகள் இருக்கும். ஒரு நிமிடத்துக்கு 1000 தடவை கூட சிறகுகளை வேகமாக அசைக்கும்.

ஈயின் தலை கறுப்பாக இருக்கும். கால்களைத் தவிர இரண்டு உணர் கொம்புகள் உண்டு. கூட்டுக் கண்கள், அவை ஒவ்வொன்றிலும் 4,000 நுண் கண்கள் உண்டு.

ஈக்குப் பற்கள் கிடையாது. உணவின்மீது உமிழ் நீரை உமிழ்ந்து, உணவைக் கரைக்கும். உணவு நீர்மமாக மாறியதும் உறிஞ்சிக் கொள்ளும். இந்த உணவு தீனிப் பையில் சேரும். பிறகு ஓய்வாக இருக்கும் நேரத்தில் தீனிப் பையில் உள்ள உணவை மெதுவாக விழுங்கும்.

கால்களிலும் உணர் கொம்புகளிலும் முடிகள் இருக்கும்.

அசுத்தத்தின் மீது ஈ அமரும் போது இந்த முடிகளில் அழுக்கு ஒட்டிக் கொள்ளும். இந்த அழுக்குடன் நமது குடி நீர், உணவுப் பொருட்களில் அமரும்போது நோய்க் கிருமிகளை ஒட்டி விடும்.


எஸ். சுஜாதா

இதை உண்ணும் நமக்கு நோய்த் தொற்று ஏற்படும். இவ்வாறு ஈ மனிதன், விலங்குகளுக்கு நோய்களை எளிதாகப் பரப்பி விடுகிறது. ஒரு காலில் 2,000 பாக்டீரியாக்கள் வரை இருக்கும் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்! ஈ அடுத்தவர்களுக்கு நோயைப் பரப்பினாலும் அடிக்கடி காலால் தனது உடலைத் துடைத்துக் கொள்ளும். இரவு நேரங்களில் ஈக்களுக்குப் பார்க்கும் சக்தி குறைவு.





ஒரு பெண் ஈ தன் வாழ்நாளில் 5, 6 முறை முட்டையிடும். ஒரு தடவைக்கு 150 முட்டைகள் வரை இடும். முட்டை வெள்ளை நிறமாக இருக்கும். முட்டை இட்டு 8 முதல் 24 மணி நேரத்தில் குஞ்சு பொரிந்துவிடும்.



முட்டையில் இருந்து வெளிவந்த புழு லார்வா எனப்படும். இந்த லார்வாவின் தலைப்பகுதி கூராகவும், கொக்கி போன்று ஒரு முள் நீட்டிக் கொண்டும் இருக்கும். பல முறை தோலுரித்து இரண்டு நாட்களில் உருவம் பெரிதாகிவிடும். அடுத்து பியூப்பா எனப்படும் கூட்டுப்புழு பருவம். கரும் பழுப்பு நிறத்தில் அசையாமல் இருக்கும். பத்து நாட்களில் ஈ முழு உருவம் அடைந்து வெளியில் வந்து விடும்.



ஈ மிகவும் சாதுவானது. எதையும் கடிக்காது. ஈ பொதுவாக உணவு கிடைக்கும் இடங்களுக்கு அருகிலேயே வசிக்கும். நன்றாகப் பறக்கும். வீட்டு ஈ, மாட்டு ஈ, இறைச்சியில் அமரும் நீல ஈ, கண்ணில் உட்காரும் சிறிய ஈ, பழ ஈ என ஈக்களில் நிறைய வகைகள் உள்ளன. உலகம் முழுவதும் ஈ பரவலாக வாழ்கிறது.

அன்புடன்...

உற்சாக பூஸ்ட்!

✉ 'பல்லி குத்துவது ஏன்?' பயனுள்ள கட்டுரை. கோகுலம் போஸ்டர் விளை யாட்டுப் பிரியர்களுக்கு அரிய வரப்பிரசாதம். 'நந்தி நடத்தியப் போர்' நெஞ்சைத் தொட்ட நயமான சிறுகதை.

- கே.எல்.கந்தரூபி,
தத்தனூர்

✉ சரியாகத் தேர்விற்கு முன்னால் 'அதிக மார்க் வாங்குவது எப்படி?' என்று ரமேஷ் பிரபா கொடுத்திருக் கும் டிப்ஸ் அருமை!

- ஆர்.அம்பிகா,
மதுரை



✉ தேர்வுகள் நெருங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் தலையங்கத்தில் 'வெற்றி உங்களுக்கே...!' என்று ஆசி கூறிய தங்களின் பாங்கும், அதிக மார்க் வாங்குவது எப்படி? என்று ஆலோசனை கூறிய அனுபவசாலிகள் சிலரின் கருத்துகளும் நிச்சயம் எங் களை உற்சாகப்படுத்தும் பூஸ்ட் ஆக இருக்கிறது என்பதை பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன்.

- எஸ்.கே.அபிஷேக்,
நெய்வேலி

✉ கோகுலத்தின் புதிய வடிவம் மிக அழகாகவும் கவர்ந்து இழுக்கக் கூடிய தாகவும் உள்ளது. 'புதையல் தீவு' முடிந்ததும் ரேவதியை ஒரு தொடர்கதை எழுதச் சொல்லுங்களேன். மின்கல மாதவனோடு நிறுத்திக் கொண்டாரே!

- இ.பு. ஞானப்பிரகாசன்,
சென்னை

✉ சிவப்புக் கல் இளவரசன் கதையும் படமும் நன்றாகப் பொருந்தி இருந்தது. தத்தூத் தவளைக்கு திருஷ்டி சுற்றிப் போட வேண்டும். எவ்வளவு அழகாக சமாளித்துள்ளது!

- ஆர்.என்.திவ்யப்ரியா,
எட்டாம் வகுப்பு,
அ.மே.நி.பள்ளி,
மதுரை

✉ தவளைக் கதையும், தங்கச் சேனைக்கிழங்கு கதை யும் சூப்பர். அட்டையில் சானியா, போஸ்டரில் செரீனா கலக்கிவிட்டீர்கள்!

- வி. திலக்குமார்,
ராஜபாளையம்

புதிர் உலகம் விடைகள்

I. இருவர் சொன்னதும் தவறு. இரண்டு குடுவையும் ஒரே எடையாகத்தான் இருக்கும். 'எந்தப் பொருள் மிதக்கின்றதோ, அது தன் எடைக்குச் சமமான திரவத்தை இடப்பெயர்ச்சி செய்திருக்கும்' என்பது மிதத்தல் விதியாகும். நீரில் மரத்துண்டு மிதந்தால் அதன் எடைக்குச் சமமான நீர் இடப்பெயர்ச்சி ஆகி இருக்கும். அதனால் அந்தக் குடுவையில் மரத்துண்டின் எடைக்குச் சமமான நீர் குறைவாக இருக்கும்' என்று விளக்கம் தந்தார் ஆசிரியர்.

II. 301

நண்பர்கள்(2)= 150 + 150 =300 மீதம் 1

3 = 100 + 100 + 100 = 300 மீதம் 1

4. 75 + 75 + 75 + 75 = 300 மீதம் - 1

5 = 60 + 60 + 60 + 60 + 60 = 300 மீதம்- 1

6 = 50 + 50 + 50 + 50 + 50 + 50 = 300 மீதம் 1

7. 43 + 43 + 43 + 43 + 43 + 43 + 43 = 301

III. அவன் தன் இலக்கை அடையும்போது மணி 12.10 இருக்கும்.


IV. 5 கோழிகள், 4 நாய்கள்

V. 1/3 நீர் சேர்க்க வேண்டும்.

VI. முக்கால் பவுன் + அரை பவுன் = ஒண்ணே கால்

முக்கால் பவுன் + அரை பவுன் = ஒண்ணே கால்

அரை பவுன் + மூன்று கால் பவுன் - ஒண்ணே கால்








குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 மா	ணி	க்	2 க	ம்	■	3 ப	■	4 க
ங்	■	■	வு	■	5 சொ	ந்	த	ம்
6 கா	ற்	7 பு	ள்	ளி	■	து	■	ப
ய்	■	தி	■	■	8 கோ	■	9 பு	ளி
■	10 மா	ர்	11 க்	■	12 வை	13 கா	சி	■
14 உ	மி	■	யூ	■	■	க	■	15 ஆ
ரை	■	16 அ	■	17 ப	18 சு	ம்	பா	ல்
19 க	ண்	ம	ணி	■	ர	■	■	ப
ல்	■	ளி	■	20 தா	ம்	பூ	ல	ம்

யார் உயர்ந்தவன்?

கதை : ஸ்நேகா   படம் : சேகர்



 ஒன்று யை அசைத்தபடி வந்து  மீது அமர்ந்தது. உடனே  டைக் கீழே தள்ளிவிட்டது. காரணம் கேட்டது  "தினமும் எனக்கு  செய்து விட்டுத்தான் நீ அமரணும். நான்தான் உயர்ந்தவன்" என்றது அலட்சியமாக . யை வேகமாக அசைத்தபடி "எனக்கு உன் தயவு வேண்டும் என்பது உண்மை . அதேபோல் நீ இனவிருத்தி செய்ய என் தயவும் வேண்டுமல்லவா? நான் தானே உயர்ந்தவன்?" என்றது . யும், ம் சண்டையிட்டன. அப்போது அங்கு வந்த  "உங்கள் இருவரையும்விட நான் தான் உயர்ந்தவன்.  இல்லாவிட்டால் உயிர்கள் ஏது? என்னைவிட உலகில் உயர்ந்தவன் யாருமில்லை" என்றது. கரு ஒன்று வர  மறைந்தது. னைப் பார்த்து சிரித்த  "யாரும் யாரையும் விட உயர்ந்தவர்கள் அல்ல. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சிறப்பு உண்டு. உயிர்கள் ஒவ்வொன்றும் சார்ந்துதான் வாழ வேண்டும்" என்றது. , ,  மூன்றும் தின் கருத்தை ஏற்றுக் கொண்டன.

சாதனை

"கில்கிறிஸ்ட் மாதிரி ஆடுவேன்!"

நெட்ட நெடு மரங்களுக் கிடையே தன் வெள் ளைக் குடை விரித்து சிறு காளான் ஒன்று பூத்திருந் தால் எத்தனை அழகாகவும் வித்தியாசமாக வும் இருக்கும்! அதுபோல டீன் ஏஜ் வயதைத் தாண்டிய கல் லூரி பெண் களாக குவிந் திருக்கும் தமிழ்நாடு பெண்கள் சீனி யர் கிரிக்கெட் டீமில் இடம் பெற்றதோடு மட்டுமில்லா மல் அத்தனை அக்காக் களுக்கு மத்தி யிலும் ஓபனிங் பேட்ஸ் வுமனாக களமிறங்கி கலக்கிக் கொண்டிருக் கிறார் இடது கை ஆட்டக்காரரான 14 வயது திருஷ்காமிணி. தமிழ்நாட்டின் பெண் கள் கிரிக்கெட் டீமில் இளம் வயதில் அதாவது 13 வயதில் இடம் பிடித்த முதல் இளம் பெண் என்கிற பெருமை இப்பொழுது இவர் வசம். சர்ச் பார்க்கில் பத்தாம் வகுப்பு படிக்கிறார்.





கிரிக்கெட் எப்படி பழக்கம்?

அப்பா டிக்கேஷ்வா சங்கர் முன்னாள் ஹாக்கி பிளேயர். கிரிக்கெட் ரசிகரும்கூட. வெஸ்ட் இண்டீஸ், ஆஸ்திரேலியா மேட்ச் எல்லாம் அவர் விடிய விடிய பார்க்கும்போது நானும் ஆர்வமா பார்க்க ஆரம்

பிச்சேன். ஆறாவது படிக்கும் போது கிரிக்கெட் பேட்டை கையிலெடுத்துட்டேன்.

சீனியர் டீமுல ஆடற அளவுக்கு எப்படி வேகமா வளர்ந்தீங்க?

ஸ்கூல் பிரின்சிபல் சிஸ்டர் மரியன் நல்ல ஆதரவு. ப்ரதீப் குமார், ராஜேஷ் சுதாஷா போன்ற கோச்களோட சரியான பயிற்சி, என்னோட உத்வேகம், உழைப்பு இதெல்லாம் காரணம்னு நினைக்கிறேன். ஒரு முறை பெரிய அண்ணா ப்ராக்டிஸின்போது தொடர்ந்து பவுன்சர் போட்டதுல என் மூக்கு உடைஞ்சு ரத்தம் கொட்டுச்சு. அதனாலென்ன. அடுத்த நாள் மறுபடியும் அதே பவுன்சர் பாலுக்கு ப்ராக்டிஸ் பண்ணினேன்.

மறக்க முடியாத மேட்ச்?

நிறைய இருக்கு. சப் ஜூனியரா ஆடும்போது கேரளாவோட சூப்பரா ஆடி ஃபோர், ஃபோரா அடிச்சி 125 ரன் சேர்த்தேன். சமீபத்தில் சென்னையில நடந்த சீனியர் பிரிவு மேட்சுல இந்தியாவிலேயே நெ.1 அணியான ரயில்வேயோடு மோதும்போது ஓபனிங் பேட்ஸ்வுமனா களமிறங்கி தொடர்ந்து 52 ஓவர் பேட்டிங் பண்ணினேன். இந்திய கேப்டன் மிதாலி ராஜ் கைகுலுக்கி பாராட்டினார்.

ஏன் பெண்கள் கிரிக்கெட் சுவாரஸ்யமா இருக்க மாட்டேங்குது?

ஓ அதுவா. எங்களுக்கும் பலமெல்லாம் இருக்கு. ஆனா சிக்ஸருக்கு ட்ரை பண்ணி அப்புறம் அவுட் ஆயிட்டா டீமுல சான்ஸ் கிடைக்காதேன்னு பெண்கள் பாதுகாப்பா கிரவுண்ட் ஷாட்ஸ் மட்டும் ஆடுவோம்.

த்ரிஷ்காக்குப் பிடிச்ச ப்ளேயர்ஸ்?

நம்ம சச்சின், ஜாக் காலிஸ், ஆடம் கில்கிரிஸ்ட். நான் இடது கை ப்ளேயர்ங்கிறதால கில்கிறிஸ்ட் மாதிரி அதிரடியா ஆடி இந்தியப் பெண்கள் கிரிக்கெட் டீமுல ஒரு நிரந்தர இடம் பிடிக்கணும்.

- சநகன்

படங்கள் : **ராஜன்**

கோகுலம் சுழல் கோப்பை



கோகுலம் இதழ்களில் ஓராண்டில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அந்தப் பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கி வருகிறோம். இந்த ஆண்டு சுழல் கோப்பையை வெல்வதற்கு இப்போதிருந்தே கடுமையான போட்டி இருந்து வருகிறது. உங்கள் படைப்புகளை நிறைய அனுப்பி வையுங்கள். உங்கள் பள்ளியில் உள்ள மற்றவர்களையும் எழுதச் சொல்லுங்கள். இன்னும் 8 மாதங்களே உள்ளன.

வாழ்த்துகள்!

பாலைவன ரோஜாவும் பேரீச்சம் பழமும்

காட்சி 1

அரசர் அல்ஜானி : என் மூன்று கண்மணிகளையும் கடந்த மூன்று நாட்களாக நான் காணவில்லை. யாரங்கே, உடனே அழைத்து வாருங்கள்.

(மூன்று இளவரசிகளும் வந்து பணிந்து வணங்கினர்)

அரசர்: என் கண்மணிகளே, வாருங்கள்!

லத்தீனா: தந்தையே, உங்களுக்காக மஸ்லின் துணியில் பூ வேலைப் பாடுகள் செய்து, ஒரு போர்வையைக் கொண்டு வந்துள்ளேன்.

ஆரீனா : நான் நிறைய வேலைப்பாடு கள் செய்துள்ள விசி றியைக் கொண்டு வந் துள்ளேன்.

குலாபி : நீங்கள் இறைவனை வணங்கி நமாஜ் செய்யும் பொழுது உபயோகிக்க, அழகான தரை விரிப்பு செய்துள்ளேன்.

அரசர் : நான் மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளேன்.

அரசி சாரனி : இவர்கள் மூவரும் உங்கள் மீது உயிரையே வைத்துள்ளனர்.

அரசர் : அப்படியா! யார் என்னை அதிகமாக நேசிக்கின்ற னர் என்று பார்க்கலாம்! லத்தீனா, என்னை எந்த அளவு நேசிக்கிறாய் என்று கூறு.

லத்தீனா : தந்தையே, நம் நாட்டின் சொத்தான பாலைவனங் களைவிட பெரியது என் அன்பு.

ஆரீனா : தந் தையே, நம் நாட் டில் குடிதண்ணீர்



காந்தலக்ஷ்மி சந்திரமௌலி

இல்லாமல் நாம் அவதிப் படுகிறோம். அதனால் இந்த உலகத்து நதிகளை விட ஆழமானது என் அன்பு.

குலாபி : தந்தையே, நாம் பாலைவனத்தில் வாழ்கிறோம். நாம் உயிர் வாழ மிக அத்தியாவசியமான பொருட்கள் உப்பும் பேரீச்சம் பழமும். அவற்றைவிட உங்களை அதிகமாக நேசிக்கிறேன்.

அரசர் : முட்டாள்! உப்பும் பேரீச்சம் பழத்திற்கும் சமானமாக என்னை நினைக்கிறாயே, உனக்கு என் மீது அன்பா? பாலைவனத்தில் கிடைக்காத ரோஜா என்று உன் மேல் உயிரையே வைத்திருக்கும் என்னை அவமானப்படுத்துகிறாயா?

குலாபி : தந்தையே, நான் உண்மையைக் கூறுகிறேன். பாலைவனத்தில் பயணிக்கும் பொழுது பேரீச்சம் பழமும் உப்பும் இல்லாமல் செல்ல முடியாது. அத்தனை அபூர்வமானவர் நீங்கள் என்று கூறினேன்.

அரசர் : வாயை மூடு. உன்னை நாடு கடத்துகிறேன்.

காட்சி 2

(சூடான் நாடு. அங்கு அரண்மனையில் இளவரசர் சயான், அரசி சுதானி, மந்திரிகள் புடைசூழ அமர்ந்திருக்கிறார்கள்)

இளவரசர் : யாரங்கே? இது என்ன மூட்டை?

வேலையாட்கள் : தெரியவில்லை மன்னா. இந்த மூட்டை



நம் நாட்டு எல்லைப் பகுதியில் பாலைவனத்தில் இருந்தது. மெது வாக அசைவது போல் இருக்கவே, இதைக் கட்டி இங்கு எடுத்து வந்துவிட்டோம்.

சயான் : ம்... யாரங்கே? இந்த மூட்டையை உடனே அவிழ்த்து விடுங்கள். (அந்த மூட்டையிலிருந்து வரும் அழகிய குலாபியைக் கண்டு எல்லோரும் திகைக்கின்றனர்.)

குலாபி : மஹாராணியாரே! என்னைத் தாங்கள்தான் காப்பாற்ற வேண்டும். நான் எந்தத் தவறும் செய்யாதவள். (கண்ணீரைத் துடைக்கிறாள்.)

இளவரசன் : ஏய் பெண்ணே, யார் நீ? எங்கள் நாட்டில் உனக்கென்ன வேலை?

குலாபி : இளவரசே, கோபம் கொள்ளாதீர்கள். அரசியாரே என் சோக கதையைக் கேளுங்கள். (நடந்தவற்றைக் கூறுகிறாள்.)

இளவரசன் : என்ன கொடுமை இது? ஒரு பேரரசரான உன் தந்தை இப்படி செய்யலாமா?

குலாபி : மன்னிக்க வேண்டும் இளவரசரே! என் தந்தையைப் பற்றி எதுவும் கூற வேண்டாம். என்னால் தாங்க முடியாது.

சுதானி : எத்தனை கொடுமைகள் செய்தாலும் உன் தந்தையை நீ நேசிப்பது உன் உயர்வான குணத்தைக் காட்டுகிறது. அது சரி குலாபி, இந்தக் கடும் வெய்யிலில் நீ எப்படி சாக்குமூட்டைக்குள் இருந்தாய்?

குலாபி : என் தாயார், என் கையில் பேரீச்சம் பழங்களும் சிறிது உப்பும் கொடுத்திருந்தார். அதை அவ்வப்பொழுது உண்டு உயிர் வாழ்ந்தேன்.

காட்சி 3

அல்ஜானி : மந்திரியாரே, இது என்ன நம் எதிரி நாடான சூடானிலிருந்து திருமண அழைப்பு! இதில் ஏதாவது சூது இருக்குமோ என்று ஐயமாக உள்ளது.

அரசி சாரனி : அரசே, மஹாராணி சுதானி மிகவும் நல்ல உள்ளம் படைத்தவர். நாம் எல்லோரும் திருமணத்திற்குச் சென்று வரலாம்.

அரசர் : ம்... ஆனால் பாலைவனத்தில் திருமணம் என்று அழைப்பு ஓலையில் குறிப்பிட்டு உள்ளனர். யாராவது கொளுத்தும் வெய்யிலில், பாலைவனத்தில் திருமணம் செய்வார்களா?

அரசி : பாலைவனம் நமது அனைத்து அரேபிய நாடுகளுக்கும் அல்லா கொடுத்த பரிசல்லவா! அதில் திருமணம் செய்வதில் தவறு என்ன உள்ளது?

அரசர் : சரி, நாம் போவதற்குப் பயண ஏற்பாடுகளை உடனே செய்யுங்கள்.

காட்சி 4

(திருமண உணவுக் கூடம்)

அரசி சுதானி : விருந்து நன்றாக உள்ளதா?

அரசர் அல்ஜானி : அரசியாரே,

இவர்தான் அந்தப் பிரபலம்!



நெல்சன் மண்டேலா

- ஜி.எஸ்.எஸ்.

பாலைவனத்தில் இப்படி அதிக நேரம் தங்குவது மிகுந்த தாகத்தையும் சோர்வையும் ஏற்படுத்தியுள்ளது. இன்னும் திருமணத்தைக் காண வேண்டும். தண்ணீர் குடிக்க கொடுத்தால் நல்லது.

அரசி சுதானி : தண்ணீரா? பாலைவனத்தில் ஏது நீர்? இருந்த தண்ணீர் தீர்ந்துவிட்டது.

அரசர் அல்ஜானி : சரி, சிறிதளவு உப்பும் கொஞ்சம் பேரீச்சம் பழமும் கொண்டு வாருங்கள்.

அரசி சுதானி : பேரீச்சம் பழமா? எகிப்து நாட்டின் வற்றாத நதியான நைல் நதியின் தண்ணீர் குடித்துள்ளீர்கள். அது போதாதா? அற்ப பொருளான பேரீச்சம் பழத்தைக் கேட்கிறீர்களே?

அரசர் அல்ஜானி : பாலைவனத்தில் வெறும் தண்ணீரும் உணவும் போதுமா? ஒரு நாளைக்கு பத்துப் பேரீச்சம் பழமாவது சாப்பிட்டால்தானே உயிர் வாழ முடியும்?

(இளவரசர் சயான் உள்ளே வருகிறார்.)

இளவரசர் : சலாம் ஆலைக்கும் மன்னா. மன்னிக்க வேண்டும். உங்களுக்குப் பேரீச்சம் பழம் பிடிக்காதல்லவா? அதனால் உங்களுக்கு மட்டும் பழம் தரப்படவில்லை.

அரசர் : இது என்ன முட்டாள்தனம்? நான் யாரிடம் அப்படி கூறினேன்?

இளவரசர் : என் வருங்கால மனைவியிடம் தாங்கள் இவ்விதம் கூறியுள்ளீர்கள்.

அரசர் அல்ஜானி : கூப்பிடுங்கள் இளவரசியை! நான் எப்பொழுது கூறினேன்?

(இளவரசி குலாபி, முக்காடு போட்டு மூடிய முகத்தோடு வருகிறாள்.)

குலாபி : சலாம் ஆலைக்கும் அரசே!

சயானி: ஆ... இது என் பெண் குலாபியின் குரல் போல் உள்ளதே! குலாபி என் அருமை மகளே எப்படியிருக்கிறாய்?

அரசர் அல்ஜானி : ஐயோ, நான் எவ்வளவு பெரிய தவறைச் செய்துவிட்டேன்! என் அருமை மகளை, இப்படி கொடூரமாக நாட்டை விட்டுத் துரத்தி விட்டேனே!

குலாபி : தந்தையே, கவலை வேண்டாம். நான் நலமாக உள்ளேன். எல்லாம் வல்ல இறைவன் நம்மைக் காப்பாற்றி விட்டார்.

அல்ஜானி : என்னருமை மகளே, நீ எப்படி பிழைத்தாய்? இந்தப் பாலைவனம் உன்னை சுட்டெரித்திருக்குமே?

குலாபி : தந்தையே, நான் என் கையில் நிறையப் பேரீச்சம் பழங்களை ஒளித்து வைத்து, அதை ஒவ்வொன்றாகத் தின்று உயிர் பிழைத்தேன்.

சுதானி : பாலைவனத்து ரோஜாவும் பேரீச்சம் பழமும் ஆஹா அருமையான ஜோடி.

(எல்லோரும் மகிழ்ச்சியுடன் சிரித்தனர்)



"டேய் ராமு, நான் எத்தனை தடவை சொல்லியிருக்கேன், வகுப்புல தின்பண்டங்கள் சாப்பிடக் கூடாதுன்னு..."

"மன்னிச்சுக்கங்க சார், நான் எண்ணலை..."

- அரிச்சந்திரன்

ஆப்ரிக்கா என்றதும் நம் நினைவுக்கு வருபவை கறுத்த நீக்ரோக்கள், வறண்ட பாலைவனங்கள், அடர்ந்த மழைக் காடுகள், நீளமான நைல் நதி, உலக நாகரிகம், பெரிய தந்தங்கள் கொண்ட யானைகள், உலகின் குள்ள மனிதர்களான பிக்மிகளும்தானே! இதைத்தான் நாம் 'இருண்ட கண்டம்' என்று அழைத்துக் கொண்டிருந்தோம். ஏன் தெரியுமா? கடந்த 200 ஆண்டுகளாகத்தான் ஆப்ரிக்காவை உலகம் கண்டு கொண்டது.

சஹாரா பாலைவனத்தைத் தாண்டி மக்கள் வாழ்வதையும் தங்கம் ஏராளமாகக் கிடப்பதையும் ஐரோப்பிய மாலுமிகள் ஓய்வெடுக்க ஆப்ரிக்காவில் ஒதுங்கியபோது கண்டு கொண்டனர். பின்னர் 'தங்கத்தைத் தேடி ஓடுதலே' இக்கண்டம் பற்றி மக்கள் அறிய நேர்ந்தது என்பது சுவையான கதை.


உலகின் இரண்டாவது பெரிய கண்டம் ஆப்ரிக்காதான். ஆப்ரிக்காவில் பாலைவனங்களும் மழைக் காடுகளும் அதிகம் உள்ளதால் மக்கள் தொகை





போவோமா புது உலகம்!

வளம் நிறைந்



ஆப்ரிக்கா!

மோகனா

குறைவாக இருக்கும். எல்லா கண்டங்களையும்விட ஒரே சீரான சீதோஷ்ண நிலை நிலவுவது ஆப்ரிக்காவில் மட்டுமே! காரணம் ஆப்ரிக்காவின் நடுவில் அமைந்துள்ள நில நடுக்கோடும், மலைகள், பாலைவனங்கள், காடுகள், புல்வெளிகள், நதிப்பள்ளத்தாக்குகள் எனப் பரவலாக அமைந்த நிலப் பகுதிகளும்தான்.

பாலை உலகின் மிகப் பெரிய பாலைவனமாகிய சஹாரா பாலைவனம் ஆப்ரிக்காவின் வட பகுதியில் அமைந்துள்ளது. 'சஹாரா'வின் பரப்பு ஆப்பிரிக்காவின் கால் பகுதி. இதைத் தவிர லிபியன், நூபியன், நமீப், கலஹாரி போன்ற பாலைவனங்களும் உள்ளன. உலகில் அதிகமாக பாலைவனம் உள்ளது ஆப்பிரிக்காவில் மட்டுமே! இதில் சஹாரா மற்றும் கலஹாரி பாலைவனத்தில் மனிதர்கள் வாழ்வதில்லை. உலகின் 6 பெரிய ஆறுகள் ஆப்பிரிக்காவில் ஓடினாலும், பாலைவனத்தாலும் சரியான போக்குவரத்து இன்மையாலும் ஆப்பிரிக்கா வளர்ந்த நாடாக கணிக்கப்படவில்லை.



ஆப்பிரிக்கா கண்டம் மிகப் பழமை வாய்ந்தது. கேம்பிரியன் காலத்துக்கு முற்பட்டது என்றே கருதப்படுகிறது. இங்குள்ள 'டெக்டானிக் தட்டு' உடைந்தே, தென்னமெரிக்கா - ஆப்பிரிக்கா என இரண்டு கண்டங்கள் ஆயின. அதற்கு முன்பு இரண்டும் சேர்ந்த நிலப்பகுதி 'கோண்டுவானா' எனப்பட்டது. டைனோசர்கள் வாழ்ந்த 'ஜூராசிக்' காலத்தில்தான் தென்னாப்பிரிக்காவும் ஆப்பிரிக்காவும் பிரிந்தன. பின்னர், 'டெர்ஷியர்' காலத்தில் இதன் கிழக்கேயுள்ள அரேபியத் தீபகற்பமும் தென்கிழக்கிலுள்ள மடகாஸ்கரும் பிரிந்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது. இங்குள்ள பாறைகளில் காணப்படும் நுண்ணுயிரிகளின் வயது 300 கோடி வருடங்கள் எனக் கணிக்கப்படுகிறது.

எகிப்திய நாகரிகத்தின் உறைவிடமான நைல் நதி உலகின் நீளமான நதியாகும். இது 'நீல நைல் நதி' என்ற பெயருடன் எதியோப்பியாவில் துவங்கி, பின் உலகின் மூன்றாவது பெரிய ஏரியான விக்டோரியா ஏரியிலிருந்து புறப்படும் வெள்ளை நைல் நதியுடன் 'சூடான்' என்ற இடத்தில் இணைந்து, எகிப்து வழியே ஓடி மத்திய தரைக்கடலில் கலக்கிறது. இதன் நீளம்

6,650 கி.மீ., காங்கோ இரண்டாவது பெரிய நதி.

ஆப்பிரிக்க புல்வெளிகளில் சிங்கங்கள் காணப்படுகின்றன. இங்கு தீயைத் தாக்குப் பிடிக்கும் மரங்களும், புதர்களும் ஏராளமாய் உள்ளன. வட ஆப்பிரிக்கப் பகுதியில், ஆசியாவில் இருப்பதைப் போன்ற கம்பளி ஆடு, வெள்ளாடு, குதிரை, ஒட்டகம், வரி குதிரை, ஆப்பிரிக்க சிவப்பு மான் போன்றவை வாழ்கின்றன. ஆண்டி லோப் என்ற கலைமான் மான், வரிக்குதிரை ஒட்டகச்சிவிங்கி, காட்டெருமை, யானை, நீர்யானை காண்டாமிருகம், பபூன் குரங்கு, சிங்கம், சிறுத்தை, கழுதைப் புலி, குள்ளநரி, ஓநாய், கீரி வகைகள், பறக்கும் அணில், வௌவால், கொரில்லா, தேவாங்கு, பெலிகன், ஹெரான், பிளமிங்கோ, நாரை, கொக்கு, நெருப்புக்கோழி போன்றவை தென் கிழக்குப் பகுதியில் வாழ்கின்றன. ஆமை, முதலை, பல்லி, விஷப் பாம்புகள், பெரிய மலைப்பாம்பு, பாலைவனத்தில் காணப்படுகின்றன.

ஆப்பிரிக்காவில் மிகமிக அதிக அளவில் கனிம வளங்கள் கொட்டிக் கிடக்கின்றன. உலகின் மிகப் பெரிய வைரச் சுரங்கமான 'கிம்பர்லி' தென்னாப்பிரிக்காவில் தான் உள்ளது. மேலும் நிலக்கரி, எண்ணெய், இயற்கை எரிவாயு போன்றவை எடுக்க எடுக்க குறையாத



அளவு உள்ளன.

இங்கு நிறையப் பழங்குடிகள் வாழ்கின்றனர். போரோரோ பெண்கள் முகத்தில் பச்சை குத்திக் கொள்கின்றனர். 'நைஜர் பகுதிகளில், காகசாய்டு இனத்தினர் வாழ்கின்றனர். இவர்களில் பெர்ஸியரும் அராபியர்களுமே அதிக எண்ணிக்கையில் உள்ளனர். 'பண்டு' என்னும் மொழி பேசுகின்றனர். இங்கு வாழும் மக்கள் பல்வேறு இனத்தவர்; அவர்களின் ஒவ்வொரு இனத்தின் மொழியும் கலாச்சாரமும் வெவ்வேறானவை.

ஒரு கிராமத்தில் ஒரு இனம் தான் வாழ்கிறது. 'மாலி' என்ற கிராமத்தில் 'டோகோன்' என்ற பழங்குடியினர் உயரமான பகுதிகளில் வீடு கட்டி வாழ்கின்றனர். வைக்கோலால் கூரையமைத்து தானியக்



பெங்குவின்

சென்ற இதழில் ஆர்டிக் பிரதேசத்தில் பெங்குவின் வாழ்வதாக வந்த செய்தி தவறு. பெங்குவின்கள் துருவப் பிரதேசத்தில் தான் வாழ்கின்றன. ஆனால் ஆர்டிக் பகுதியில் அல்ல. அண்டார்டிகாவில் மட்டுமே பெங்குவின்கள் வசிக்கின்றன. அங்கு மனிதர்கள் வசிப்பதில்லை.

களஞ்சியம் கட்டுகின்றனர். இதன் கதவுகளை மரத்தினால் செய்து, சிற்ப வேலைப்பாடுடன் அமைக்கின்றனர். இம்மரக் கதவில் உள்ள மனித, விலங்குகளின் உருவங்கள் தானியங்களைக் காப்பதாக நம்புகின்றனர்.

அனைவரும் 'கடவுள் ஒருவரே' என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். ஆனால் ஆவி உலகைப் பற்றிய நம்பிக்கைகள் ஏராளமாய் உள்ளன.

உலக நாகரிகத்தின் தாய் வீடு எகிப்துதான். இங்கேதான் அனைத்துவகை நாகரிகங்களும் பிறப்பெடுத்தன. காலண்டர் முறை, நேரம் அறிதல், வானவியல், அழகுக் கலை, அறிவியல், கட்டடக் கலை என அனைத்திற்கும் தொட்டில் போட்டது நைல் நதிப் பள்ளத்தாக்கு நாகரிகமே! இங்குள்ள பிரமிடுகளும் அதிலுள்ள மம்மிகளும், இறந்தவர்களுக்கான கிடங்குகளும் தங்கமும் உலகப் புகழ் பெற்றவை.

கி.பி. 17ம் நூற்றாண்டில் துவங்கிய அடிமை வாணிபம் 19ம் நூற்றாண்டு இறுதிவரை தொடர்ந்தது. இதுவே இந்நாட்டின் பெரிய வாணிபமாக, அமெரிக்காவுக்கு 'அடிமை மனிதர்களை' ஏற்றுமதி செய்தது. தங்கம், கோலா, நெருப்பு கோழியின் இறகுகள், உப்பு போன்றவை முன்பு வாணிபப் பொருட்களாய் இருந்தன. விவசாயமும் கால்நடை வளர்ப்புமே ஆப்பிரிக்க தொழில்களாய் இருந்தன. ஓட்ஸ், சோளம், பார்லி, கம்பு போன்றவை முக்கிய பயிராகவும், பேரிச்சை, ஆலிஸ், ஆரஞ்சுப் பழம், ஆடு, கழுதை, ஒட்டகம் வளர்ப்பு போன்றவையும் காணப்பட்டன. அன்னாசி, பருத்தி, சர்க்கரை, டீ, கடலை, பனை எண்ணெய், புகையிலை போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன. ●




• பிக்மி

ார்ச் இதழில் 'கத்தரிச் செடி' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். ரிசு பெற்ற செடிகள் இங்கே...

கத்தரிச் செடி



ரண்டாம் பரிசு : **பா.சாய்ஷங்கர்,** ▲ ழாம் வகுப்பு, புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளி, சென்னை



முதல் பரிசு : **எஸ்.ஸ்ரீவித்யா,** ▲ ஒன்பதாம் வகுப்பு, நகர மேல்நிலைப் பள்ளி, கும்பகோணம்



மூன்றாம் பரிசு : **ஆர்.தினேஷ்,** ▲ ன்பதாம் வகுப்பு, சுவாமி சிவானந்தா மேல்நிலைப் பள்ளி, கோவை

ஆறுதல் பரிசு : **ஜி.என்.பவித்ரா,** ஆறாம் வகுப்பு, சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி ▼



▲ ஆறுதல் பரிசு : **எஸ்.கார்த்திக் ராஜா,** ட்டாம் வகுப்பு, எஸ்.எம்.எம். பள்ளி,



செய்தி நேரம்



ஜப்பானில் வரும் 2025 ஆம் ஆண்டில் இரண்டு தொழிலாளர்களுக்கு ஒரு ஓய்வூதியதாரர் இருப்பார் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அந்த அளவுக்கு முதியோர் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. இளைஞர்கள் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

இந்தியாவின் தங்கம் உற்பத்தி ஆண்டுக்கு 3 டன். ஆனால் வரிச்சலுகை, சுற்றுச்சூழல் விதிமுறைகளில் தளர்வு அறிவிக்கப்பட்டால், அடுத்த 10 ஆண்டுகளில் தங்கம் உற்பத்தி 100 டன்னாக அதிகரிக்க வாய்ப்புள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

கழிவறையைப் பயன்படுத்திய பிறகு, சாப்பிடுவதற்கு முன்பு, செல்லப் பிராணிகளுடன் விளையாடிய பிறகு, தும்மல், இருமலுக்குப் பிறகு, உணவைப் பரிமாறுவதற்கு முன்பு இரு கைகளையும் சோப்புப் போட்டுக் கழுவுவதால் வயிற்றுப் போக்கு ஏற்படுவது 47 சதவீதம் தடுக்கப்படுகிறது.

ஜப்பானைச் சேர்ந்த டோமி நிறுவனம், யூமெல் என்ற ரோபோட் பொம்மையை அறிமுகம் செய்துள்ளது. 37 செ.மீ. உயரம் கொண்ட இந்த பொம்மை மனிதர்களைப் போலவே இரவில் தூங்கி, காலையில் எழுந்தவுடன் குட்மார்னிங் சொல்லும். இரவில் குறிப்பிட்ட நேரம் வந்ததும் கொட்டாவி விட்டபடியே 'தூங்கப் போகலாமா?' என்று கேட்கிறது. இதன் விலை ரூ.3,600.

மொபைல் போன் தயாரிப்பில் உலகிலேயே முதல் இடத்தில் இருப்பது சீனாதான். 2004ஆம் ஆண்டில் மட்டும் சீனாவில் 24 கோடி மொபைல் போன்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 2005ல் இது 50 கோடியாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேர்முகத் தேர்வு

கதை : சந்தோஷ்குமார், ஆஜ்மீர்
படம் : பிள்ளை



பத்து வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!



விடைகள் : 1.நத்தையின் உணர்கொம்பு 2.பாம்பின் நாக்கு 3.பன்றியின் மூக்கு 4.ஆந்தையின் கண் 5.வௌவாலின் காது, 6.வண்டின் கால் 7.முயலின் வாய் 5.எலியின் கை 9.குரங்கு 10.தவளையின் வாய்

இங்கு இரண்டு மட்டும் ஒரே தாவர
இனத்தைச் சேர்ந்தவை.
எங்கே கண்டுபிடியுங்கள்?



**மறுபாதி
உங்கள் கையில்!**



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka